09TH JANUARY 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 64 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

## இஸ்லாத்தின் மீது அவதூறு!

# ஞானசார தேரருக்கு சிறைத் தண்டனை

**ஒன்பது மாதம் சிறை** | **1500 ரூபாய் அபராதம்**



கலபொட அத்தே ஞானசார தேரருக்கு ஒன்பது மாத சிறைத்தண்டனையும் 1500 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் மதத்தை அவதூராகப் பேசியமை தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட ஞானசார தேரரின் சட்டத்தரணிகள், மருத்துவ அறிக்கைகளை சமர்ப்பித்து அவரது உடல்நிலையை சுட்டிக்காட்டி குறைந்த தண்டனையை வழங்குமாறு மன்றாடினர்.

கடந்த 2016ஆம் ஆண்டு சந்தேகநபர் "இஸ்லாம் ஒரு புற்று நோய், அதை அவர் துடைத்தெறிவார்" என்று மேற்கோள் காட்டி வெறுப்புணர்வை ஏற்படுத்திய உரையின் அடிப்படையில் இந்த தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த அறிக்கையைத் தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பலர் முறைப்பாடுகளை

02ம் பக்கம்பார்க்க...



## அடுத்த வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு!

**பாராளுமன்றில் வர்த்தக பிரதியமைச்சர்!**

அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவு திட்டத்தில் அரச

03ம் பக்கம்பார்க்க...

## HMPV நோயாளிகள் எவரும் அடையாளம் காணப்படவில்லை

**சுகாதார அமைச்சர்**

இலங்கையில் HMPV நோயாளிகள் எவரும் இதுவரை கண்டறியப்படவில்லை என சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

HMPV வைரஸ் தொற்று தொடர்பில் சுகாதார அமைச்சு விழிப்புடன் இருப்பதாகவும், நாட்டில் வைரஸால் பாதிக்கப்பட்ட எவரேனும்

03ம் பக்கம்பார்க்க...



## புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு தேவை

**சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன**

"புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு நாடாளுமன்றத்தால் வழங்கப்பட வேண்டிய முழுப் பங்களிப்பையும் வழங்குவதற்கு

02ம் பக்கம்பார்க்க...



## மியன்மார் அகதிகள் விடயத்தில் சர்வதேச சட்டங்களை மதியுங்கள்!

**மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் சபையில் கோரிக்கை!**

சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளித்து, மியன்மார்

04ம் பக்கம்பார்க்க...

## சர்வதேச மாணிக்க கண்காட்சி ஜனாதிபதியால் திறந்து வைப்பு



(பீ.ஏ. முக்தார்)

பேருவளை சீனங்கோட்டை மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரண வர்த்தக சங்கத்தின் பூரண ஏற்பாட்டிலும், மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரண அதிகார

12ம் பக்கம்பார்க்க...

## கோப் குழுவின் தலைவராக நிஷாந்த சமரவீர

பொது நிறுவனங்கள் பற்றிய குழுவின் (COPE) தலைவராக பாராளுமன்ற உறுப்பினர்

03ம் பக்கம்பார்க்க...

**ஊடக விருது வழங்கும் விழா!**

## உதயம் ஆசிரியர் உட்பட ஐவருக்கு வாழ்நாள் சாதனை விருது



(அஷ்ரப் ஏ. சமட்)

இலங்கை பத்திரிகை ஆசிரியர் பேரவையும் இலங்கை பத்திரிகை நிறுவனமும்

02ம் பக்கம்பார்க்க...

## ரமழான் மாதத்தில் சாதாரண பரீட்சையை நடாத்துவதை மறு பரிசீலியுங்கள்

**இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் பிரதமரிடம் வேண்டுகோள்**

க.பொ.த (சா/தர) பரீட்சையை 2025 மார்ச் மாதம் நடாத்துவதற்கு இலங்கை பரீட்சை திணைக்களம் எடுத்திருக்கின்ற முடிவினை மீள் பரிசீலிக்க வேண்டும் என இலங்கை இஸ்லாமிய

03ம் பக்கம்பார்க்க.



## வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு சட்ட மூலம்

**பிரதமரால் சபையில் சமர்ப்பிப்பு**

நடப்பாண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பிரதமர் கலாநிதி

03ம் பக்கம்பார்க்க...

## இலங்கை ஹஜ் தூதுக்குழு நாளை சவூதி பயணம்

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள ஹஜ் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்கும் அது தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காகவும் சமய விவகார கலாச்சார அமைச்சர் ஹினிதும செனவி தலைமையில் உயர் மட்டக் குழுவொன்று நாளை வெள்ளிக்கிழமை சவூதி அரேபியா புறப்பட்டுச் செல்லவுள்ளது.

03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank















## ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து வருடாந்தம் நடாத்தி வரும் ஊடகத்துறை விருது வழங்கும் விழா நேற்று கல்கிசை பீச் ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந் நிறுவனங்களின் இணைத் தலைவர்களான குமார் நடேசன்,சிறி ரணசிங்க ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு முன்னாள் பேராசிரியர் சாவித்ரி குணசேகர அதிதியாக கலந்து கொண்டார்.

இம்முறை பத்திரிகைத்துறையில் சிரேஷ்ட 5 பத்திரிகையாளர்களுக்கு வாழ்நாள் சாதனை தங்க விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். சந்திரிக்கா விஜேசுந்தர, என்.எம்.அமீன், பெனாட் ரூபசிங்க, ஜெனிட்டா கரீம், மற்றும் யோகமுத்தி , ஆகிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு வாழ்நாள் விருதுகள் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களின் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இலங்கையில் வெளிவரும் மும்மொழி பத்திரிகைகளிலும் இந்த ஆண்டின் சிறந்த ஊடகவியளாளர்கள் மேர்வின் சில்வா விருது. உபாலி விஜயவர்த்தன விருது சுப்பிரமணிய செட்டியார் விருது, பேராசிரியர் கைலாசபதி விருது. டி.ஆர்.விஜயவர்த்தன விருது என 20 துறைகளில் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன

சிறந்த புலனாய்வு செய்தியாளர், விறுவிறுப்பான செய்தி விருது, சிறந்த சுகாதார விருது, சிறந்த விளையாட்டு செய்தி விருது, வடிவமைப்பாளர் விருது, சிறந்த கார்டூன் கேளிச் சித்திரம், சிறந்த புகைப்படப்பிடிப்பாளர் சிறந்த இணையதள செய்தி விருது, சிறந்த காணொளி ஆக்கம் சிறந்த பந்தி எழுத்தாளர், சிறந்த வணிகவியல் விருது.

தமிழ் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், தமிழன், விடிவெள்ளி ,தினக்குரல், தமிழ் மிரர் போன்ற பத்திரிகைகள் சிறந்த ஆக்கங்களை சமர்ப்பித்த அவர்களுல் விருதுகள் வழங்கி வழங்கப்பட்டன.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். இதற்கு எதிரணிகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என நம்புகின்றோம்.”

- இவ்வாறு சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“நாட்டில் பலமான ஆளுங்கட்சி உள்ளது.

எனவே, புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுத்து அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால், சட்டவாக்க சபையில் அதனை நிறைவேற்றிக்கொள்வதற்குரிய பங்களிப்பை வழங்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

புதிய அரசமைப்பு அவசியம் என நாட்டு மக்களும் கருதுகின்றனர். இதற்குரிய மக்கள் ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்குரிய பொறுப்பு உள்ளது. இது தொடர்பிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என நம்புகின்றோம்” - என்றார்.

## இஸ்லாத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்தனர்.

கிருலப்பனை பொலிஸாரால் நீண்ட கால விசாரணையின் பின்னர் இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மூத்த சட்டத்தரணி ஷிராஸ் நூர்தீன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழுவினால் முதலாவது முறைப்பாட்டாளரின் நலன்கள் கவனிக்கப்பட்டன.






## HMPV...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கண்டறியப்பட்டால் மக்களுக்குத் தெரியப்படுத்த அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஆளுங்கட்சி நிஷாந்த சமரசிங்க எம்.பி, எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

“வைரஸிற்கான சோதனைகளை மேற்கொள்ளும் இடங்கள் பெயரிடப்பட்டுள்ளன. அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

தொற்றுநோயியல் பிரிவு தொடர்ந்து வைரஸ் குறித்த விவரங்களை சுகாதார அமைச்சுக்கு வழங்கி வருகிறது. ஜனாதிபதியும் இந்த விடயத்தில் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளார்.

சந்தேகத்திற்குரிய நோயாளி ஒருவர் பதிவாகியுள்ளார். ஆனால், அவருக்கு நடத்தப்பட்ட



சோதனையின் பெறுபேறு எதிர்மறையாக உள்ளது.” என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், நோயெதிர்ப்பு தொடர்பான விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் நீலிகா மாலவிகே சில காலத்திற்கு முன்பு இலங்கையில் HMPV நோயாளிகள் கண்டறியப்பட்டதாகக் கூறியதை சில ஊடகங்கள் தவறாக மேற்கோள் காட்டியதாகவும், முக்கியமான பிரச்சினைகளை அறிக்கையிடும் போது பொறுப்புடன் செயல்படுமாறு ஊடகங்களைக் கேட்டுக்கொள்வதாகவும் அமைச்சர் கூறினார்.

## வரவு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஹரிணி அமரசூரிய இன்று (09) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

குறித்த சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு புதிய வேட்புமனுக்களை கோரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலம் சமீபத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றிய பின்னர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய வேட்புமனுக்களை கோரும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும்.

## அடுத்த...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஊழியர்களுக்கு கணிசமான அளவு சம்பள உயர்வு வழங்கப்படுமென இன்று (9) பாராளுமன்றத்தில் வர்த்தக பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து, கருத்து தெரிவித்த அவர் எவ்வளவு தொகை அதிகரிப்பென்று இப்போது சொல்ல முடியாது.என்றாலும் கணிசமான அளவு சம்பள உயர்வு வழங்குவோம்.

ரணில் விக்கிரமசிங்க தபால் வாக்குகளுக்காக பொய்யான வாக்குறுதிகளை வழங்கினார்.நாம் அவ்வாறில்லை.வாக்குறுதியை நிறைவேற்றுவோம்.சர்வதேச நாணய நிதியம் இதற்கு தடை போடாதென்றும் குறிப்பிட்டார்.

# தர்ம சக்தி அமைப்பினர்கள் - முஸ்லிம் சமய திணைக்கள பணிப்பாளருக்குமிடையிலான சிநேகபூர்வ சந்திப்பு



**(இக்பால் அலி)**

தர்ம சக்தி அமைப்பின் தலைவர் சங்கைக்குரிய கலாநிதி மாதம்பஹம அஸ்ஸஜி தேரர் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு சினேகபூர்வ விஜயமென்றை நேற்று முன்தினம் மேற்கொண்டு திணைக்கள பணிப்பாளர் M.S.M. நவாஸ் உடன் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் இனங்களுக்கிடையிலான சகவாழ்வு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துவது தொடர்பான பொறிமுறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் தர்ம சக்தி அமைப்பும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் இணைந்து எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தர்ம சக்தி அமைப்பின் நிறைவேற்று செயலாளர் மரியாதைக்குரிய பாதிரியார் அநுர பெரேரா, உதவி செயலாளர் சிவ ஸ்ரீ சிவ தர்சக சர்மா குருக்கள், பொருலாளர் அஷ்ஷேய்ஹ் A. N.M. பிர்தௌஸ், நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ரிஸான் ஹூஸைன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்களான சுல்கிப் மௌலானா, அஸாம் லத்தீப் ஆகியோருடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் M.S. அலா அஹமட், வக்ப் நியாய சபை செயலாளர் (பதில்) M.N.M. ரோஸன், திணைக்கள சகவாழ்வு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் அஷ்ஷேய்ஹ் A.M. றிஸ்மி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கோப்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வைத்தியர் நிஷாந்த சமரவீர ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பொது நிறுவனங்கள் பற்றிய குழு இன்று (09) பிற்பகல் 2.00 மணிக்கு பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2026...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வருடாந்தம் இலங்கை மற்றும் உலக நாடுகளிலிருந்து வரும் ஹஜ்ஜாஜிகள் தொடர்பான ஒப்பந்தம் ஒன்று ஜித்தாவில் கைச்சாத்திடப்படவுள்ளது.அமைச்சர் ஹினிதும செனவி இலங்கை சார்பாக இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திவுள்ளார்.3500 பேர் இலங்கையிலிருந்து இம்முறை ஹஜ்ஜுக்குச் செல்லவுள்ளனர்.

இலங்கையிலிருந்து செல்லும் தூதுக்குழுவில் தேசிய ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் முனீர் முழப்பர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட ஹஜ் குழுவிலிருந்து எவரும் இக் குழுவில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.எனினும் தற்போது உம்ராஸகடமையை நிறைவேற்றுவதற்காக சென்றுள்ள ஹஜ் குழுவின் தலைவர் றியாஸ் மிஹிலார் தேவையேற்படின் இக் குழுவில் இணைத்துக் கோள்ளப்படுவார் என பிரதியமைச்சர் முனீர் முழப்பர் தெரிவித்தார்.

சவூதி அரேபிய ஹஜ் விவகார அமைச்சரைச் சந்தித்து இக் கழு பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிலும் கைச்சாத்திடவுள்ளது. சவூதி அரேபியாவின் இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வதின் வழிகாட்டலில் ஜித்தாவிலள்ள பதில் கவுன்சிலர் மபுசாலா தலைமையிலான குழுவினர் இச் சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

## ரமழான்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆசிரியர் சங்கம் பிரதமரும் கல்வி அமைச்சருமான கௌரவ ஹறிணி அமரசூரிய அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மிகுந்த அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக பரீட்சை திணைக்களத்திலும், கல்வியுடன் சம்பத்தப்பட்ட உயர்



நோன்பு காலமானது முஸ்லிம்களின் புனித மாதமாகவும் முஸ்லிம்கள் அமல்களை அதிகமாக செய்யும் மாதமாகவும், அல் குர்ஆனை அதிகமதிகமாக ஓதுவதற்கு கால நேரத்தை செலவிடும் மாதமாகவும் விளங்குகின்றது.இதனால் மாணவர்களுக்கு பரீட்சையை ஒருமித்து எழுதுவதற்குரிய மன நிலையில் சிரமமேற்படுவதுடன், பரீட்சை கடமைகளில் ஈடுபடும் முஸ்லிம் உத்தியோகத்தர்களும் பதவிகளிலும் முஸ்லிம் அதிகாரிகள் இல்லாமையையும் குறிப்பிடலாம்.

மேல் மாகாண பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தை உடனடியாக வாபஸ் பெற முடியுமானால் பரீட்சை திகதியை மாற்றுவதற்கு ஏன் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க முடியாது?எனவும் பிரதமரிடம் இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தின் செயலாளர் எம்.கே.எம். நியார் கேள்வி எழுப்பியுள்ளார்.



www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JANUARY 09 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மியன்மார் அகதிகள் விவகாரத்தை மனிதாபிமான முறையில் அணுகுங்கள்

வடக்கு – முல்லைத்தீவு கடற்கரைப்பில் அகதி அந்தஸ்து கோரி மியன்மாரில் இருந்து வருகை தந்த ரோஹின்ய முஸ்லிம்களின் விவகாரம் நாட்டில் பரவலாக பேசப்படுகின்ற ஒரு விடயமாக தற்போது மாறியுள்ளது. 115 பேர் கொண்ட இவர்களை திருப்பி அனுப்புவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது.

நாட்டில் பெரும்பாலானோர் தீர்மானத்திற்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். இத் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என அரசியல்வாதிகள், மனித உரிமையாளர்கள் உட்பட ஐக்கிய நாடுகள் சபையும் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தங்க வைத்துள்ள இந்த அகதிகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்ட பின், அவர்கள் மியன்மாருக்கு மீளவும் அனுப்பப்படுவார்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

இந்தப் பின்னணியில், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம், ஐ.நா.விற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி, மார்க் அன்ட்ரூ ரென்ஜி கோரிக்கை விடுத்துள்ளார். பாராளுமன்ற தேர்தல் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர்களான முஜீபுர் ரஹ்மான், றிஷாட் பதியுதீன் ஆகியோரும் இவர்களை திருப்பி அனுப்ப வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கு மேலதிகமாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விஷேடமாக இது குறித்து பேசியுள்ளார்.

UNCHR எனும் பகுதிகளுக்கான ஐ.நா. அபிவிருத்தி செய்துள்ள உடன்படிக்கைகளின் படி செயற்பட வேண்டும். இந்த ஒப்பந்தத்தின்படி, புகலிடக் கோரிக்கையாளர்களும் நாட்டில் தங்கி இருப்பதற்கு பூரண அனுமதி உண்டு. இவர்களை எந்தக் காரணம் கொண்டும் மியன்மாருக்கு அனுப்பி வைக்க கூடாது. மியன்மார், ரோஹின்ய மக்களை தம் எதிரிகளாகவே பார்க்கிறார்கள்.

அவர்களுக்கு தொடர்ந்து தொந்தரவுகளை வழங்குகிறார்கள். இவர்களை ஏற்றுக் கொள்ள தயார் என்று நேச நாடு ஒன்று தெரிவிக்கும் வரை இலங்கையிலே இம்மக்களை வைத்திருக்க வேண்டும்.

இலங்கையர்களில் சுமார் 10 லட்சம் பேர் வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். இதனை எமது அரசாங்கம் மறந்து விடக்கூடாது. இலங்கை பல நெருக்கடிகளை எதிர் நோக்கிய போதும், தற்போதைய ஆளுங்கட்சியின் ஆதரவாளர்கள் பலர் அறபு நாடுகள் உட்பட பல நாடுகளில் புகலும் பெற்று வருவதை மறந்து விடக்கூடாது.

இந்தப் பிரச்சினையை முஸ்லிம் பிரச்சினை என பார்க்காது, மனிதாபிமான நோக்கத்துடன் நோக்குவது அவசியமாகும். இதே நேரம் நாட்டிற்கு ஒரு லட்சம் மக்கள் வர இருப்பதாக உளவுத் தகவல்களை ஆதாரம் காட்டி, சில செய்திகள் வெளியாகி உள்ளன.

ஒரு லட்சம் அகதிகள் வர இருப்பதற்காக இந்த அகதிகள் பிரச்சினையை திசை திருப்புவதற்கு, சில சக்திகள் முயற்சிக்கின்றனவா? என்ற கேள்வியும் எழுப்படுகின்றது. அரசு இந்த விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் நோக்க வேண்டும்.

ரோஹின்ய அகதிகளது, உயிர்வாழும் உரிமையை கருத்தில் கொண்டு இந்த அகதிகளை பார்வையிடுவதற்கு மனித உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

இவ் அரசாங்கம் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்படும் என்று தான் எதிர்பார்க்கின்றோம். ஆகவே, இந்தப் பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் நோக்கி, இவ் எண்ணிக்கையிலான 115 பேரையும் நாட்டிலிருந்து வெளியேற்றும் தீர்மானத்தை அரசு உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும்.

## மியன்மார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரோஹிங்கிய அகதிகள் விவகாரத்தில் மனிதாபிமான ரீதியில் செயற்படுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் உயர் சபையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்றையதினம் (09) உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

“நாட்டு மக்கள் பாரிய எதிர்பார்ப்புடன் இந்த அரசாங்கத்தை கொண்டுவந்தனர். அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டியது அரசின் பொறுப்பாகும். 75 வருடங்களாக, பாரம்பரிய கட்சிகள் செய்த தவறுகளை சுட்டிக்காட்டியே இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது. எனவே, ஏனையவர்களைப் போன்று, நீங்களும் பொடுபோக்குத்தனமாக இருந்துவிடக் கூடாது என்பதில், மக்கள் உன்னிப்பாக இருக்கின்றனர்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் எகிறி வருகின்றது. இன்னும் நாட்டில் சாதகமான சூழல் ஏற்படவில்லை. அன்றாடத் தேவைகளுக்கான அத்தியாவசியமான சில பொருட்களின் விலைகளையாவது, குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரிசி விலையில் கூட மக்களுக்கு இன்னும் விமோசனம் கிடைக்கவில்லை. அன்றாட வயிற்றுப் பசிக்கான உணவைக் கூட சாதாரண விலைக்கு வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், உப்புப் பிரச்சினை உட்பட சில துரிதமாக தீர்க்கக் கூடிய விடயங்கள் இருப்பினும், அவற்றை ஏன் காலதாமதப்படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை.

அதேபோன்று, தலைமன்னார் பங்குத் தந்தை டெனி கலிஸ்ரஸ் எமக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறார். பிரதமருக்கு முகவரியிட்ட கடிதத்தின் பிரதியே அது. அதாவது, மன்னாரில் 18990 ஹெக்டெயர் நிலப்பரப்பானது, வர்த்தமானி அறிவித்தல் மூலம் வனவிலங்கு திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பிரபல்யமான மன்னார் தீவில் இவ்வாறான வர்த்தமானி பிரகடனங்கள் மூலம், சுற்றுலாத்துறை மற்றும் இன்னோரன்னை துறைகளை கட்டியெழுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இதனை கவனத்தில் எடுக்குமாறு வேண்டுகின்றேன்

யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில், 2009-2010 ஆண்டு பயிற்சிகளை நிறைவு செய்த 237 ஆசிரியர்களுக்கு, இதுவரையில் அவர்களுக்கான உத்தியோகபூர்வ பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. கல்வி அமைச்சர் ஹறினி அவர்கள், இந்த விடயத்தை கருத்திற்கொண்டு, அவசரமாக அவர்களுக்கான சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இலங்கையிலே 400க்கு மேற்பட்ட நூலக உதவியாளர்கள் பணியாற்றுகின்றார்கள். அந்தவகையில், தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலக உதவியாளர்கள் உட்பட பலர் சம்பள மறுசீரமைப்பு விடயத்தில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். 20212ஆம் ஆண்டுக்கு பிற்பாடு, பல்கலைக்கழக நூலக உதவியாளர்களை, சிற்றூழியர்களின் தரத்துக்கு பதவி இறக்கம் செய்ததன் மூலம், நூலக உதவியாளர்கள் பெரும் மனஉளைச்சலுக்கும் அவமானத்திற்கும் உள்ளாகியிருப்பதாக தெரிவிக்கின்றனர் எனவே, 2012க்கு முன்னர் இருந்த அதே பதவி நிலையில், அவர்களது நியமனங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சர் என்ற வகையில், பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இந்த சபையில் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால், மன்னார் தீவு பெரிதும் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக சேதமடைந்துள்ள பாதைகளை சீரமைப்பதுடன், முறையான வடிகான் அமைப்பு உள்ளிட்ட இன்னோரன்ன உள்கட்டமைப்புக்கள் சீரமைக்கப்பட வேண்டும். மேலும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இதுவரையில் எந்தவொரு நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை. இந்த விடயத்தையும் அரசு கவனத்தில்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, வவுனியா, சாளம்பைக்குளத்தில் குப்பைகூளங்களைக் கொண்டுவந்து கொட்டுகின்றார்கள். அந்தப் பகுதியில் பல்கலைக்கழகம் ஒன்றும் அமைந்துள்ளது. எனவே, இந்தப் பகுதியில், வைத்தியசாலை கழிவுகளும் கொட்டப்படுகின்றன. இதனால், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனது அருகில் அமர்ந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் முத்து முஹம்மத் அவர்களும் அந்த ஊரைச் சேர்ந்தவரே. கடந்த கால கோட்டாவின் அரசாங்கம், இவற்றையெல்லாம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. எனவே, இந்த அரசாங்கத்திலாவது மேற்படி பிரச்சினைக்கு, மாற்றுவழி ஒன்றை கண்டறிந்து, விரைவில் தீர்வுகாண வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, எங்களுடன் இரண்டு தசாப்தகாலமாக இந்த பாராளுமன்றில் இருந்தவர் என்ற வகையில், அவரது நற்பண்புகளை கண்டிருக்கின்றோம். அவரது பேச்சு மற்றும் வாக்குறுதிகள் மீது நம்பிக்கைகொண்டுதான், மூவின மக்களும் இந்த அரசாங்கத்தை ஆதரித்தனர். இந்த அகதிகளை மியன்மாருக்கு திருப்பி அனுப்பவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்வாறு எமது நாட்டுக்கு அகதிகள் வருகின்றபோது, சர்வதேச சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அந்தவகையில், இந்த மியன்மார் அகதிகள் விடயத்திலும் மனிதாபிமான ரீதியில் செயற்படுங்கள் – என்றார்.



# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணப்பொதிகள் வழங்கி வைப்பு

பாத்த ஹேவா ஹெட்ட பிரதேச பாடசாலை மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு தேவையான கற்றல் உபகரணப் பொதி ARI நிறுவனத்தின் பூரண அனுசரணையுடன் உடுதெனிய ஹாஷா ரிசப்ஷன் மண்டபத்தில் (01) ARI நிறுவனத்தின் நிறைவேற்று முகாமையாளர் ரிக்காஸ் மரிக்கார் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

இவ் வைபவத்திற்கு கண்டி கல்வி வலய காரியாலயத்தில் இருந்து ஜெமீல், தீபா விஜயசிங்க, எலன் மற்றும் இலங்கை வங்கியின் மாரஸ்ஸன கிளை முகாமையாளர் நுவாந்தி, நிஹாரா ஆசிரியர், கண்டி தலாது ஓயா பொலிஸ் சாஜன் மஹிந்த அமரவீர, ஜாமிஉல் அல்ஹர் ஜும்மா மஸ்ஜித் நிர்வாகி தலைவர் அல்ஹாஜ் ஷாஜஹான் ஆகியோரேடன் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

ARI நிறுவனத்தின் உரிமையாளர் ரிக்காஸ் மரிக்கார் தனது நிறுவனத்தின் ஊடாக பல பாடசாலைக்களுக்கு கணினி வழங்கியுள்ளதாகவும்,



மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கும் புலமைப்பரிசில் திட்டம் பற்றியும் , பெண்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு திட்டம் பற்றியும் மிகத்தெளிவாக தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி தமக்கு கற்றுக் கொடுத்த ஆசிரியர் பற்றியும், எதிர்காலத்தில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் எனவும், ஆசிரியர்கள் மூலமாக தாம் இன்று இவ்வாறான ஒரு நல்ல நிலையில் இருப்பதாகக் கூறி தமது ஆசிரியர்களை கௌரவித்தார்.

மேலும் எதிர்காலத்திலும் ARI நிறுவனம் கல்வி சம்மந்தமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் என அதன் முகாமையாளர் குறிப்பிட்டார்.

# நிர்வாக சேவை தரம் மூன்றுக்கான ஆட்சேர்ப்பு தகைமை பட்டியலில் 204 பேர்

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

இலங்கை நிர்வாக சேவை தரம் மூன்றுக்கு ஆட்சேர்ப்புக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆட்சேர்ப்புக்கான ஆரம்பகட்ட தகமை பட்டியலில் ஒன்பது சிறுபான்மையினர் உட்பட 200 நூற்று 04 பேர் உள்ளடங்கியுள்ளனர். இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையின் எழுத்துப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய 204 விண்ணப்பதாரிகள் தகைமை பெற்றுள்ளனர்.

மேற்படி போட்டிப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய 155 நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பவுள்ளது.

எழுத்துப் பரீட்சையில் நாற்பது வீதம் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகள் அடிப்படையில் அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளில் 204 பேரின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

நேர்முகப்பரீட்சையின் முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி, எழுத்து பூர்வமாக மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஆகிய இரண்டிலும் அதிகூடிய புள்ளிகள் பெற்ற 155 பேர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. நேர்முக பரீட்சைக்கு தகைமை பெற்றவர்களுக்கு நேர்முகப் பரீட்சை தொடர்பான திகதி விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

# புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு 08 முதல் 12 வரை

( ஐ. ஏ. காதிர் கான் )

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடு, எதிர்வரும் 08 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக, இலங்கைப் பரீட்சை திணைக்களம் (04) அறிவித்துள்ளது.

இதேவேளை, அண்மையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு, வினாத்தாள்களில் இருந்து கசிந்த மூன்று கேள்விகளுக்கும் இலவச புள்ளிகள் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

குறித்த பரீட்சைக்கு முன்னதாக மூன்று கேள்விகள் கசிந்ததாக எழுந்த சர்ச்சைக்கு பதிலளிக்கும் வகையில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தரவினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நீதிமன்ற உத்தரவு, கடந்த 31 ஆம் திகதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பணிமனை ஆரம்பம்

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

களுத்துறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பணிமனை களுத்துறை மாவட்ட செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் பணிமனை ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

அமைச்சரின் தலைமையில்



ஆரவாரங்களின்றி இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர் ஜனக குணவர்தன உள்ளிட்ட மாவட்ட செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# MR ZAM HOLDING நிறுவனத்தால் கற்பிட்டியிலுள்ள அரச நிறுவனங்களுக்கு புத்தாண்டு கேக் வழங்கி வைப்பு



புதுவருடத்தை முன்னிட்டு கற்பிட்டி பிரதேசத்தில் இயங்கிவரும் MR ZAM HOLDING கடல்சார் உணவு வகைகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனத்தினால் கற்பிட்டி பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனங்கள் சிலவற்றுக்கு கேக் வழங்கி வைக்கப்பட்டது.

இதனை MR ZAM HOLDING நிறுவனத்தின் தலைவர் ஸமான் ஹிஷாம் கப்லி ஏற்பாடு செய்திருக்க, அதனை இந்நிறுவனத்தின் முகாமையாளர் நஜாத் குறித்த அரச நிறுவனங்களின் பொறுப்பாளர்களிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெகு விமர்சையாக இடம்பெற்ற கல்பிட்டி விஞ்ஞான செயற்திட்டத்தின் 2ஆவது பரிசளிப்பு நிகழ்வு

(அரபாத் பஹுர்தீன்)

கல்பிட்டி விஞ்ஞான செயற்திட்டத்தின் 2ஆவது வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும், முதலாவது பிரியாவிடை நிகழ்வும் கடந்த மாதம் (30) கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தம்பி நெய்னா மரிக்கார் கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கல்பிட்டி பிரதேச மாணவர்களின் இலட்சியக் கனவான வைத்தியர் மற்றும் பொறியியலாளர் என்ற கனவுகளை நனவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட கல்பிட்டி விஞ்ஞான செயற்திட்டத்தின் முதல் வருட மாணவ, மாணவியர் இடம்பெற்று முடிந்த உயர்தரப்பரீட்சையிலே தோற்றியிருந்தார்கள்.

இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றிய மாணவ, மாணவிகளுக்கான பிரியாவிடை நிகழ்வும், எதிர்வரும் 2025ஆம் ஆண்டு உயர்தரம் எழுதக் காத்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கான தவணைப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகளுக்குமான பரிசளிப்பு நிகழ்வும் இச் செயற்திட்டத்தின் தலைவரும், கல்பிட்டி கோட்டக்கல்வி காரியாலயத்தின் விஞ்ஞானப்பாட ஆசிரிய ஆலோசகருமான எம்.ஜி.எம்.



ஹிஸான் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் முதல் அங்கமாக நிகழ்சியில் பங்கேற்ற கல்பிட்டி விஞ்ஞான செயற்திட்டத்தின் ஆசிரியர்களின் உரை மற்றும் தவணைப் பரீட்சைகளில் முதல் 3 இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு மற்றும் இச் செயற்திட்டம் கடந்து வந்த பாதை தொடர்பான காணொளி, எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பான விளக்கங்கள் என்பன இடம்பெற்றிருந்தன.

பின்னர் இந்நிகழ்வின் 2ஆம் அங்கமாக உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இச் செயற்திட்டத்தின் நிருவாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பெற்றோர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவரகள் சங்க உறுப்பினர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் பங்கேற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.

# பாலஸ்தீன வரலாற்றின் இரத்த களறியும், அநீதியும்...





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

உலகில் நிலையான ஓர் இடத்தை தனக்காகக் கொண்டிருக்காமல் இருந்த ஓர் இனம் யூத இனம். ஹிட்லர் முதல் ரஷ்யர்கள் வரை கணக்கில்லாமல் யூதர்களை கொன்று குவித்த வரலாற்றை நாம் படித்திருப்போம்.

யூத எதிர்ப்பு என்பது ரஷ்யா, ஜெர்மனி மட்டுமின்றி ஐரோப்பாவின் அனைத்து நாடுகளிலும் எல்லா காலங்களிலும் இருந்து வந்துள்ளது. ஏன் இப்படி யூதர்களை எதிர்க்க வேண்டும் என நீங்கள் யோசிக்கலாம். காரணம், வரலாற்றின் ஒரு சில காலகட்டங்களில் யூத மேல்தட்டு வர்கத்தினரின் ஆக்கிரமிப்பு எண்ணமும், அதற்காக அவர்கள் செய்த சூழ்ச்சிகளும்தான் இது போன்ற ஆழமான எண்ணத்தை யூதர்கள் மீது ஏற்படுத்தியது என்பதே உண்மையாகும்..

1875-ம் ஆண்டில் ஜியோனிஸ சித்தாந்தத்தை உருவாக்கிய தியோடர் ஹெஸில் (வுாநழனழச உநசணட) யூதர்களுக்கு ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்று திட்டமிட்டார். இதற்கான முதலாவது மாநாடு 1897 ஆகஸ்ட் மாதம் சுவிட்சர்லாந்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டில்தான் பாலஸ்தீனத்தில் யூதர்களை குடியமர்த்தவும் அதற்காக தனிநாடு அமைக்கவும் முடிவு செய்தார்கள்.

அதன் பின், 1901ல் துருக்கி சென்ற தியோடர் ஹெஸில், உதுமானிய பேரரசின் தலைவராக இருந்த இரண்டாம் அப்துல் ஹமீத் கானிடம், பாலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியமர்த்தவும் அதற்கு சன்மானமாக 150 மில்லியன் பவுண்டுகளை தருவதாகவும் கேட்க, அதை முற்றிலும் மறுத்துவிட்டார் ஹமீத் கான்.

முதலாம் உலகப் போர் முடிவுக்கு வரும் சமயத்தில் உதுமானிய சாம்ராஜ்ஜியம் வீழ்ந்து பாலஸ்தீனப் பகுதி பிரிட்டனின் ஆட்சியின்கீழ் வந்தது. அப்போது பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளராக இருந்த ஆர்தர் பால்ஃபர், பிரிட்டன் யூதர்களின் பிரதிநிதிகளில் ஒருவராக இருந்த வால்டர் ராத்ஷில்ட் என்பவருக்கு 1917 நவம்பர் 2-ல் ஒரு கடிதம் எழுதுகிறார்.

அதில், ”பாலஸ்தீனத்தில் யூதர்களுக்குத் தாய்நாட்டை உருவாக்கித் தர வேண்டும் என்கிற ஜியோனிஸ சித்தாந்தத்தின் கோரிக்கைக்கு பிரிட்டன் அரசு ஒப்புதல் அளிக்கிறது. இந்த லட்சியத்தை அடைவதற்கான அனைத்து உதவிகளையும் பிரிட்டன் செய்து கொடுக்கும் என்பதில் உறுதியுடன் இருக்கிறது இதுவே, பிரிட்டன் அரசின் பாலஸ்தீனத்துக்கான கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது” எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் யூதர்கள் மீது அதிகரித்த வெறுப்புக்கு எதிர் வினையாற்றும் வகையிலும், புலம்பெயர்ந்த யூத மக்களுக்கான தாயகம் ஒன்றை நிறுவும் நம்பிக்கையில் சியோனிச இயக்கம் உருவாக்கப்பட்டது. ஆஸ்ட்ரோ-ஹங்கேரியாவைச் சேர்ந்த முன்னணி சியோனிச இயக்கத்தின் செயல்பாட்டாளரான தியோடர் ஹெர்சல் என்பவரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சியோனிச இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யூதர்களை இஸ்ரேலுக்கு குடியேற்ற வேண்டுமென போரடத் துவங்கினர். ஜியோனிச இயக்கம் பணக்கார யூத வணிகர்கள், ஐரோப்பிய அரசுகளிடமிருந்தும் கணிசமான ஆதரவைப் பெற்றது.

முன்னணி பிரிட்டிஷ் அரசியல்வாதிகள்தான் அந்தக் காலத்தில சியோனிச இயக்கத்தை ஆதரித்தவர்களில் முதன்மையானவர்களாக இருந்தனர். 1915-ஆம் ஆண்டில், பாலஸ்தீனத்தை உள்ளடக்கிய ஒரு சுதந்திர அரபு அரசு உருவாவதற்கு உதவுவதாக மெக்காவை ஆண்டு வந்த ஷெரீப்புக்கு பிரிட்டன் வாக்குறுதியளித்தது அதற்கு கைமாறாக, ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக அரபுப் படைகள் கிளர்ச்சி செய்ய வேண்டுமெனவும் கூறியது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு,இந்த வாக்குறுதியை மீறும் வகையில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஆர்தர் பால்ஃ போர், பாலஸ்தீனப் பிரதேசத்தில் யூதர்களுக்கென்று ஒரு தாய் நாட்டை அமைத்துக் கொள்வதற்கு ஆதரவாக ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்

பிரிட்டன் படை பாலஸ்தீனத்தை நோக்கி புறப்பட்டது. 1917 டிசம்பர் 11 அன்று ஜாபா கேட் வழியாக ஜெரூஸலத்தில் நுழைந்த பிரிட்டன் ஜெனரல் எட்மண்ட் ஆலன்பீ இன்றுடன் சிலுவையுத்தம் முடிவுக்கு வருகிறது என குறிப்பிட்டார். பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு தனிநாடு என்ற பிரிட்டனின் திட்டத்துக்கு சர்வதேச நாடுகளின் கூட்டமைப்பும் 1922-ல் ஒப்புதல் வழங்க ஐரோப்பிய நாடுகளில் இருந்த யூதர்களில் 90 ஆயிரம் பேர் பாலஸ்தீனத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கே குடியமர்த்தப்படுகிறார்கள்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள்

உலகின் யூதர்களில் சுமார் 50மூ பேர் இஸ்ரேலில்தான் வாழ்கின்றனர்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான மோதல் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தொடங்கியது, என்றாலும் இந்த நிலப்பரப்பின் வரலாற்று முக்கியத்துவம் பைபிள் காலத்திற்கும் முந்தியதாக உள்ளது. லெபனான், சிரியா, ஜோர்டான், எகிப்து மற்றும் மத்தியதரைக் கடலின் எல்லையில் உள்ள தெற்கு லெவன்ட்டின் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சிறிய பகுதியே மோதலுக்குரிய பகுதியாக தொடர்ந்து வருகிறது. தொடர்ச்சியாக மாறிவரும் எல்லைகள், தங்கள் நிலம் துண்டாடப்படுகிறது என்ற குற்றச்சாட்டுகள், காலங்காலமாகவே இந்த நிலம் எங்களுக்கு சொந்தமானது என்ற உரிமைக்கோரல்கள் போன்றவற்றுடன் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஈரான் மற்றும் துருக்கி உள்ளிட்ட நாடுகள் மாறிமாறி கொடுத்து வந்த ஆதரவுகள் எல்லாம் ஒன்றாக சேர்ந்துதான் யூதர்களும், அரேபியர்களும், பாலஸ்தீனியர்களும் தங்களுக்கு இடையே மாறிமாறி கடுமையாக மோதிக்கொல்லும் அளவிற்கு இப்பகுதியை ஒரு போர்க்களமாக மாற்றியுள்ளன.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதலை மதப் பிரச்சினை அல்லாது பிரதேசம் சார்ந்ததாகவே பலரும் கருதி வருகின்றனர். எனினும், யூத மதத்திற்கும் இஸ்லாத்திற்கும் இஸ்ரேல் என்ற நிலப்பரப்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற அம்சத்தை ஆராயமால் இந்த மோதலுக்கான வரலாற்று ரீதியிலான முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

உலகின் தொன்மையான மக்கள் வசிக்கும் நகரங்களில் ஒன்றான ஜெருசலேம், இஸ்லாம், கிறிஸ்தவம், யூத மதம் ஆகிய மூன்று முக்கியமான ஆபிரகாமிய மதங்களுக்குமே புனிதத் தலமாக கருதப்படுகிறது. இது எபிரேய மொழியில் எழுதப்பட்ட பைபிளிலும் முக்கியத்துவமுடையதாக குறிப்பிடப்பட்டுள்ளது. யூத பாரம்பரியத்தின்படி, யூத மதத்தின் முற்பிதாவாக அறியப்படும் ஆபிரகாம் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பு தனது மகனை கடவுளுக்கு பலி கொடுத்த இடமாக இஸ்ரேல் குறிப்பிடப்படுகிறது. தாவீது மன்னன் ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராகக் கொண்டு இஸ்ரேலை ஆட்சிப்புரிந்தான் என்றும், அவன் மகஙன சாலமன் தனது பெயரில் முதல் கோவிலைக் கட்டிய இடமாகவும் ஜெருசலேம் விளங்கிறது என எபிரேய பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது. பைபிள் காலங்களில், புனித யாத்திரைக்காக ஜெருசலேம் செல்ல முடியாத மக்கள் ஜெருசலேம் இருக்கும் திசையை நோக்கி பிரார்த்தனை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டனர், இன்றும் கூட, பெரும்பாலான ஜெப ஆலயங்கள் ஜெருசலேமை நோக்கியே அமைந்துள்ளன.

இதேபோல், முஹம்மது நபியின் ஆன்மா ஜெருசலேமிலிருந்தே பரலோகத்திற்கு பயணம் செய்தது என்று குர்ஆன் குறிப்பிடுகிறது. அல்-அக்ஸ ா மசூதி மற்றும் பாறை மாடக் கோயில் உட்பட இஸ்லாம் மதத்தவர்களுக்கு

விருப்பமாகவும் உள்ளது”.

இஸ்ரேல் ஒருபுறம் யூதர்களின் புனித பூமியாகவும் மறுபுறம் அரேபியர்களின் வரலாற்று பூமியாகவும் இருக்கிறது என்ற கதைதான் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து கூறப்பட்டு வந்தது. உண்மையில், யூதர்கள், இஸ்லாமியர்கள் என இருவருக்குமே இஸ்ரேலிய நிலப்பரப்பின் மீது தொடர்புண்டு என்றாலும்கூட இஸ்லாமியர்களே நீண்ட காலமாக இந்நிலப்பரப்பை ஆண்டு வந்துள்ளனர்.

19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் யூதர்கள் மீது அதிகரித்த வெறுப்புக்கு எதிர் வினையாற்றும் வகையிலும், புலம்பெயர்ந்த யூத மக்களுக்கான தாயகம் ஒன்றை நிறுவும் நம்பிக்கையில் சியோனிச இயக்கம் உருவாக்கப்பட்டது. ஆஸ்ட்ரோ-ஹங்கேரியாவைச் சேர்ந்த முன்னணி சியோனிச இயக்கத்தின் செயல்பாட்டாளரான தியோடர் ஹெர்சல் என்பவரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சியோனிச இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் யூதர்களை இஸ்ரேலுக்கு குடியேற்ற வேண்டுமென போரடத் துவங்கினர். ஜியோனிச இயக்கம் பணக்கார யூத வணிகர்கள், ஐரோப்பிய அரசுகளிடமிருந்தும் கணிசமான ஆதரவைப் பெற்றது.

முன்னணி பிரிட்டிஷ் அரசியல்வாதிகள்தான் அந்தக் காலத்தில் சியோனிச இயக்கத்தை ஆதரித்தவர்களில் முதன்மையானவர்களாக இருந்தனர். 1915-ஆம் ஆண்டில், பாலஸ்தீனத்தை உள்ளடக்கிய ஒரு சுதந்திர அரபு அரசு உருவாவதற்கு உதவுவதாக மெக்காவை ஆண்டு வந்த ஷெரீப்புக்கு பிரிட்டன் வாக்குறுதியளித்தது அதற்கு கைமாறாக, ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக அரபுப் படைகள் கிளர்ச்சி செய்ய வேண்டுமெனவும் கூறியது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு,இந்த வாக்குறுதியை மீறும் வகையில் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஆர்தர் பால்ஃ போர், பாலஸ்தீனப் பிரதேசத்தில் யூதர்களுக்கென்று ஒரு தாய் நாட்டை அமைத்துக் கொள்வதற்கு ஆதரவாக ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்

1947 வரை, இப்பகுதி பிரிட்டிஷ் காலனிய ஆணைக்குட்பட்ட பாலஸ்தீனம்(ஆசவைளா ஆயனெயவந ீயடநளவைநெ) என்றே அழைக்கப்பட்டது யூதர்களுக்கு ஒரு தாயகத்தை நிறுவுவதோடு, பெரும்பான்மை அரபியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே காலனியாதிக்க ஆணையின் நோக்கம் என்று கூறப்பட்டது.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான யூதர்கள் மட்டுமே குடிபெயர வேண்டும், குடியேற வேண்டுமெனில் யூதர்கள் அங்கு நிலத்தை வாங்க வேண்டும் என்பன போன்ற கட்டுப்பாடுகளை பிரிட்டன் துவக்கத்தில் விதித்திருந்தது. 1933-இல் நாஜிக்கள் யூதர்களைத் இனப் படுகொலை செய்யத் தொடங்கிய பின்னர், யூத தாயகம் குறித்த பிரச்சினையை உடனடியாக தீர்க்க வேண்டும் என சர்வதேச அரங்கில் சியோனிச இயக்கதினர் திடீரென அழுத்தம் கொடுக்கத் துவங்கினர். 1938-ஆம் ஆண்டு நடந்த ஈவியன் மாநாட்டில் - மடகாஸ்கர், பிரிட்டிஷ் கயானா, அலாஸ்கா

படுகொலையின் போது யூதர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்களை தீர்வு காண வேண்டிய நிலையிலிருந்த பிரிட்டிஷ் அரசியல்வாதிகள், அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையில் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் கீழிருந்த பாலஸ்தீனத்தை இரண்டாக பிரிக்கும் திட்டத்தை முன்மொழிந்தனர். பாலஸ்தீனத்தை இரண்டாக பிரிப்பதற்கு, பிரிட்டனுக்கு உரிமை உள்ளது என்பதை நியாயப்படுத்தி, 1942ல், சியோனிச இயக்கத்தைச் சேர்ந்த ஒரு முன்னணி செயற்பாட்டாளர்(சைம் வெய்ஸ்மேன்) பரவலாக எல்லோரிடம் சென்றடையும் வகையில் எழுதப்பட்ட கட்டுரையில் இவ்வாறு கூறினார், ”கடைசியாக நடந்த போரின் விளைவாக அரேபியர்கள் இதுவரை பெற்றுள்ளதெல்லாம் மிகப்பெரியதுதான் - தற்போது நடக்கும் போரின் விளைவாக, அவர்கள் இனி வருங்காலங்களில் எதைப் பெற்றாலும் - அவர்கள் ஏற்கனவே சிலவற்றையாவது பெற்றிருக்கிறார்கள், மேலும் பலவற்றைப் பெறுவார்கள் - இவையாவும் ஜனநாயக நாடுகளின் முயற்சியால் கிடைத்தது என்பதால் அவர்கள் முழுக்க முழுக்க ஜனநாயக நாடுகளுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள், இனி வருங்காலங்களிலும் கடன்பட்டிருப்பார்கள். எனவே யூதர்கள் பாலஸ்தீனத்தில் தங்களுக்கென்று சொந்தமாக காமன்வெல்த் குடியரசை உருவாக்குவதற்கான நியாயமான கோரிக்கையை ஜனநாயக நாடுகள் அங்கீகரித்து உருவாக்குவதற்கு உதவ வேண்டும்.”

1947-இல், ஐநா 181-வது தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின்கீழ் இருந்த பாலஸ்தீனத்தை ”சுதந்திரமான அரபு-யூத நாடாக” பிரித்தது. அச்சமயத்தில், காலனிய பாலஸ்தீனத்தில் சுமார் 6 சதவீத நிலம் யூதர்கள் வசமிருந்ததோடு மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு யூதர்களும் குடியேறியிருந்தனர். ஐநா பிரிவினை திட்டத்தின் மூலம், இஸ்ரேல் நாட்டை உருவாக்குவதற்கு 56 சதவீத நிலம் யூதர்களுக்கு பறித்துக் கொடுத்தனர்.

யூதர்கள் தங்களுக்கு கிடைத்ததை மனமுவந்து ஏற்றுக்கொண்டனர். அரபு நாடுகள் இதற்கெதிராக வெகுண்டெழுந்தன.

அரபு-இஸ்ரேல் மோதல்

மே 14, 1948 இல், இஸ்ரேலின் ஸ்தாபக தந்தை டேவிட் பென்-குரியன், நவீன இஸ்ரேல் நாடு நிறுவப்பட்டதாக அறிவித்தார். பாலஸ்தீனியப் படைகள் மட்டுமல்லாது, பல அரபு நாடுகளின் இராணுவங்களும், புதிதாக உருவாக்கப்பட்ட யூத அரசுக்கு எதிராக கொஞ்ச நாட்களிலேயே போரை அறிவித்தன. அப்போதும் கூட அமெரிக்காவால் வாரி வழங்கப்பட்ட நிதியுதவியை கொண்டு இஸ்ரேல் தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளத் தயாராக இருந்தது.

ஏறக்குறைய 7,00,000 பாலஸ்தீனியர்கள், அல்லது பிரிட்டனின் காலனியாக இருந்த பாலஸ்தீனத்தில் இருந்து வந்த அரபு மக்களில் பாதி பேர், அடுத்தடுத்த நடந்த மோதலின் போது தங்கள் சொந்த மண்ணை விட்டு விரட்டியடிக்கப்பட்டதால் காசா, மேற்குக் கரை, ஜோர்டான் மற்றும் சிரியாவில் சென்று தஞ்சமடைந்தனர்.

விடுதலைப் போராட்டம் என்று யூதர்களால் குறிப்பிடப்படும் போரும், அல்லது நக்பா (பேரழிவு) என்று அரேபியர்கள் மனதிலுள்ள விரட்டியடிக்கப்பட்ட நிகழ்வும், இஸ்ரேல் அரசிற்கான புதிய எல்லைக் கோடுகளை உருவாக்கியதோடு ”காசா பகுதி” என அறியப்பட்ட கடற்கரையோரமாக அமைந்துள்ள ஒரு துண்டு நிலப்பரப்பும் உருவாகுவதற்கு தற்காலிக போர் தவிர்ப்பு கோடுகள் வழிவகுத்தது. இந்த காசா பகுதியை எகிப்தும், கிழக்கு ஜெருசலேம் பகுதியோடு மேற்குக் கரை பகுதியை ஜோர்டானும் கைபற்றிக்கொண்டன.

(சூயஸ்க்கால்வாய்) நெருக்கடியின் போது, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் நாடுகளின் துணையுடன் எகிப்திடமிருந்து சினாய் தீபகற்பத்தைக் கைப்பற்றியதன் மூலம் இஸ்ரேல் தனது பிராந்திய எல்லைகளை மேலும் விரிவுபடுத்தியது. ஏற்கனவே அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே முரண்பாடுகள் தீவிரமடைந்திருந்த சமயத்தில் இந்த படையெடுப்பின் காரணமாக ஆறு நாட்கள் தொடர் போர் வெடிப்பதற்கு வழிவகுத்தது(ஜ"ன் 5, 1967 - ஜ"ன் 10, 1967). இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளின் (எகிப்து, சிரியா மற்றும் ஜோர்டான்) கூட்டுப் படையினருக்கும் இடையே போர் நடந்தது. எண்ணிக்கையின் அடிப்படையில் அரபு நாடுகள் பலமாக இருந்தபோதிலும், தங்குதடையற்ற நிதியுதவி, ஒழுங்கமைப்பட்ட இராணுவ உதவி இஸ்ரேலுக்கு கிடைத்தது. இதன் விளைவாக சினாய் தீபகற்பம், காசா பகுதி, மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் மற்றும் சிரியாவிலிருந்த கோலன் குன்றுகளின் (Syrian Golan Heights) பெரும்பாலான பகுதிகளை கைபற்றுவதில் இஸ்ரேலுக்கு தீர்மானகரமான வெற்றியைப் பெற்றுத் தந்தது.

இது இஸ்ரேல் அரசின் கீழிருந்த மொத்த நிலப்பரப்பை மூன்று மடங்காக உயர்த்தியது. இஸ்ரேலிய எழுத்தாளர் அவ்னர் கோஹென், வில்சன் மையத்திற்கு எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டபடி ஆறு நாள் நடந்த போர் ”தனது இருப்பிற்காக போரிடும் ஒரு நாடு என்ற நிலையிலிருந்த இஸ்ரேலை பிராந்திய அளவிலான விரிவாதிக்க சக்தியாக, ஆக்கிரமிப்பு சக்தியாக இஸ்ரேலை மாற்றியது.”

எகிப்து மற்றும் சிரியாவின் தலைமையில், அரபு நாடுகள் 1973-இல் இஸ்ரேல் மீது மீண்டும் போர் (யோம் கிப்பூர் போர்) தொடுத்தன. இந்தப் போரிலும் இஸ்ரேலே வெற்றி பெற்றது என்றாலும் எந்தவொரு நிலப்பரப்பும் கைப்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆறு நாள் போருக்குப் பிறகு இஸ்ரேல் கைப்பற்றிய நிலங்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டதாகவே கருதப்படுகிறது.

இஸ்ரேலுடன் இருபது ஆண்டுகளுக்கு மேலாக மோதல் இருந்தபோதிலும், 1979-இல், சினாய் தீபகற்பத்திலிருந்து இஸ்ரேலியப் படைகளையும் குடியேறியவர்களையும் திரும்பப் பெறுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து யூத இஸ்ரேலிய அரசை அங்கீகரித்த முதல் அரபு நாடாக

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...

# சமீரகம அல் இர்பானிய்யா பாலர் பாடசாலை மாணவர்களின் பிரியாவிடை மற்றும் புதியவர்கள் வரவேற்பு நிகழ்வு






**(எம்.எச்.எம்.சியாஜ், எம்.யூ.எம்.சனூன்)**

மதுரங்குளி, சமீரகம அல் இர்பானிய்யா பாலர் பாடசாலை சிறார்களின் கலை ஆற்றல் ஆளுமைகள் வெளிப்பாடும், பிரியாவிடை மற்றும் புதிய ஆண்டிற்கான மாணவர்கள் வரவேற்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை (04) புத்தளம் சமீரகம முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் பாலர் பாடசாலை ஆசிரியர்களான றிஸ்னா மற்றும் அனிஷா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் சமீரகம முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம். மிஹ்ழார் (நளீமி) கலந்து கொண்டதுடன், ஏனைய அதிதிகளாக சமீரகம பள்ளிவாசல் தலைவர் எம்.இப்திகார் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி இர்பான் மற்றும் சமீரகம பாடசாலையின் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிறார்கள் தமது கலைத் திறமைகள் ஆற்றல்கள் மற்றும் ஆளுமைகள் என்பவற்றை வெளிப்படுத்தினர்.

இதேவேளை குறிப்பிட்டு கூறும் வகையில் கையடக்க தொலைபேசிகள் இன்றைய சிறார்களின் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் மற்றும் கையடக்க தொலை பேசிகள் இல்லாத அன்றைய காலங்களில் சிறார்களின் மத்தியில் காணப்பட்ட மனித நேய பண்புகள் என்பவற்றின் வேறுபாடுகளை எடுத்தியம்பும் நாடகம் அனைவரினதும் பாராட்டுக்களை பெற்றதுடன் அதற்கான தயார் படுத்தல்களையும் முழு நிகழ்வின் ஏற்பாடுகளையும் பெற்றோர்களின் பங்களிப்புடன் ஆசிரியர்களான ஆர்.றிஸ்னா மற்றும் எஸ் அனிஷா ஆகியோர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது

# 2025ம் ஆண்டிற்கான அரச பாடசாலைக் கடமைகளை ஆரம்பித்தல் நிகழ்வு






**(எம்.பஹத் ஜுனைட்)**

கிளீன் ஸ்ரீ லங்கா (Clean Sri Lanka)"தேசிய நிகழ்ச்சித்திட்டத் துடன் இணைந்து 2025 ஆம் வருடத்தில் அரச கடமைகளை ஆரம்பித்தல் மற்றும் அரசாங்க சேவை சத்தியபிரமாணம் செய்யும் நிகழ்வு வியாழக்கிழமை (02) மட்/மம/ஹிழுறிய்யா வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.ஐ.யஸீர் அறபாத் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

"க்ளீன் ஸ்ரீ லங்கா" என்பது வளமான நாட்டையும் அழகான வாழ்க்கையையும் கட்டியெழுப்பு வதற்கு அத்தியவசியமான, கூட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றும், அத்துடன் பொறுப்புக்கூறும் தொழிற்பாடாகும்.

இன, மத அல்லது அரசியல் பேதமின்றி இத்தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து செயற்படுவதற்கு உறுதிமொழி அளிக்கின்றோம்.

என்ற அடிப்படையிலும் பாடசாலையில் ஆசிரியர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக் களை சிறப்புற நடைமுறைப் படுத்தல் மாணவர்களின் கடமைகள் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பாகவும் ஆசிரியர் சத்தியபிரமாணம் மற்றும் மாணவர் சத்திய பிரமாணம் என்பன இடம் பெற்றன.

அதனைத் தொடர்ந்து பாடசாலையின் அதிபர் எஸ்.ஐ.யஸீர் அறபாத் புதுவருடம் தொடர்பாக சிறப்புரை நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் எமது பாடசாலையின் 2025ம் ஆண்டுக்கான முக்கிய சில பதவிகளுக்கான புதிய நியமனங்களும் அதிபரால் ஆசிரியைகளுக்கு வழங்கிவைக்கப் பட்டதுடன் பாடசாலையின் அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களும் கல்விசாரா ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

# வெளிமாவட்ட வறிய குடும்பங்களுக்கு, மஹரகம வைத்தியசாலையில் இலவச வசதிகள்

**( ஐ. ஏ. காதிர் கான் )**

மஹரகம - புற்றுநோய் வைத்தியசாலையில், வெளி மாவட்டங்களிலிருந்து சிகிச்சை பெற வருபவர்களுக்காக பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக, வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இங்கு, வெளி மாவட்டங்களி லிருந்து வரும் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக் காக, இலவச உணவு மற்றும் முழுமையான தங்குமிட வசதிகளுடன் கூடிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதற்காக, 36 அறைகளைக் கொண்ட புதிய வீடு கட்டப்பட்டுள்ளதாகவும் நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது.

இங்கு சிகிச்சை பெற வருபவர்கள், முன் கூட்டியே 011 - 2745800 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், வைத்தியசாலை நிர்வாகம் மேலும் அறிவித்துள்ளது.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு





**(ஏ.எச்.எம். ஹாரீஸ்)**

அம்பாரை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சவளக்கடை, சாளம்பைக்கேணி, மத்திய முகாம் போன்ற பிரதேசங் களைச் சேர்ந்த மக்களுக்கு நளீர் பௌன்டேசன் சமூக சேவை அமைப்பின் வேண்டுகோளிற்கி னங்க தென் கிழக்கு சமூக நலன்புரி அமைப்பு (செஸ்வோ ஸ்ரீலங்கா) அமெரிக்கா சக்காத் பவுண்டேஷ னின் பூரண அனுசரணையில் அத்தியவசிய பொருட்கள் அடங்கிய உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு 3ம் வட்டார பல்தேவைக் கட்டட வளாகத்தில் (04) இடம்பெற்றது.

நளீர் பௌண்டேசன் அமைப்பின் ஸ்தாபக தலைவர் எம்.ஏ.நளீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமெரிக்கா ஸக்காத் பவுண்டேஷ னின் இனைப்பதிகாரி பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த பசால் உர் ரஹ்மான் பிரதம அதிதியாக கலந்து கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

மேலும் நளீர் பௌன்டேசன் அமைப்பானது மக்களுக்கு பல சேவைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அனுராதபுர மாவட்ட விவசாயிகளுக்கு இலவச பலா செடிகள் வழங்கி வைப்பு



**(எம்.ரீ.ஆரிப்)**

அனுராதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு இலவச பலா செடிகளை வழங்க வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதன் கீழ் அனுராதபுரம் மொரகொட மற்றும் ஹேனபொலயகம பிரதேசத்தில் வசித்து வரும் 400 விவசாயிகளுக்கு பலாச் செடிகள் ஆளுநரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி உதயுதவியை அமேரிக்காவில் வசித்து வரும் கலாநிதி விஜேசிறி அமரசிங்க மற்றும் மஞ்சுள கொடித்துவக்கு ஆகியோரினால் வழங்கப்பட்டுள்ளது.



மஹாஇலுப்பல்லம் விவசாய ஆர-ாய்ச்சி நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சிறந்த வகை பலாச் செடிகளே இங்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

# விபத்துக்களில் இருந்து மக்களை பாதுகாக்கும் பொலிசாரின் திட்டத்திற்கு ஒத்துழைப்பு கிடைக்குமா?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

தினமும் நடைபெறும் வாகன விபத்துக்களால் நாட்டின் பல பாகங்களில் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

வருடாந்தம் 3000 இற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறான விபத்துக்களால் மரணிக்கின்றனர். விபத்தொன்று நடந்து முடிந்த பின்னர் யார் தவறு? யார் சரி? என்பதை தேடுவதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இவ் விபத்துக்களால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்களால் பாதிக்கப்படுபவர்கள் சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களாகும். பெண்கள் கணவனை இழக்கும் போது அந்தக் குடும்பம் அநாதரவாகின்றது. பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர் அல்லது தாய் - தந்தையர் பலியாகின்ற போது, அக் குடும்பமே அநாதரவாகின்றது. பொருளாதார ரீதியாக பல நெருக்கடிகளை சந்திக்க நேரிடுகின்றது.

பின்விளைவுகள் நீண்ட காலத்திற்கு தொடரக் கூடியதாக அமைகின்றன. இவ்வாறான நிலைமைகளில் இருந்து ஒவ்வொருவரும் பாதுகாப்புப் பெறுவதாக இருந்தால், முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

அதே போன்று, வாகன ஓட்டுநர்களும் பொதுமக்களது உயிருக்கு மதிப்பளித்து மிகவும் அவதானமாக வாகனத்தை செலுத்த வேண்டிய பொறுப்பை சுமந்தவர்களாக இருக்கின்றனர்.

அதிகமான விபத்துக்களின் போக்குகளை அவதானிக்கும் போது, பொதுப் போக்குவரத்து பஸ் வண்டிகளால் ஏற்படும் விபத்துக்கள் கூடுதலாக நடைபெற்று உள்ளன. புள்ளிவிபரங்களின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டில் முதல் 10 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம், 1818 வீதி விபத்துக்கள் பதிவாகி உள்ளன. இந்த விபத்துக்களால் சுமார் 2000 பேர் அளவில் உயிரிழந்துள்ளனர்.

2023 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2200 விபத்துக்களால் 2557 பேர் பலியாகி இருக்கின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி நிஹால் தல்துவ அண்மையில் தெரிவித்தார். இவ்வாறாக வருடாந்தம் 2000 இற்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் இடம்பெறுவதோடு, பலியாகின்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணமே உள்ளன.

எத்தனை வகையான வீதிப் போக்குவரத்துச் சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும், வீதி விபத்துக்களும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

தினமும் காலை முதல் இரவு வரையில் நாட்டில் உள்ள அனைத்து வீதிகளிலும் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டவர்களாக, வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை - ஒழுங்கு விதிகளை மீறுபவர்களையும் கண்காணித்து அபராதம் விதித்தும் சட்ட நடவடிக்கை எடுத்தாலும் விபத்துக்களின் எண்ணிக்கை 2000ஐ தாண்டி விடுவதோடு மரணிப்போர் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ளன. அவ்வாறே காயமடைந்து முடமாகின்றவர்களது எண்ணிக்கை ஆயிரக் கணக்கிலாகும்.

அவ்வாறாயின், இத்தகைய விபத்துக்கள் ஏன் நடைபெறுகின்றன? எவ்வாறு நடக்கின்றன? விபத்துக்களுக்கான காரணங்கள் யாவை? இத்தகைய விபத்துக்களை கட்டுப்படுத்த முடியாதா? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. ஒவ்வொரு சாரதியும் காலையில் எழுந்து தமது வாகனத்தை செலுத்தும் முன்னர், குறித்த பிரயாணம் மிகவும் பாதுகாப்பாக அமைய வேண்டும் என்று தாம் வணங்கும் இறைவனை ஃ கடவுளை பிரார்த்தித்தவராகவே வாகனத்தை கைக்கொள்ள வேண்டும். ஒருபோதும் தனது வாகனம் விபத்திற்கு உள்ளாக வேண்டும், அதன் மூலம் யாரும் மரணிக்க வேண்டும் என்று கனவிலும் நினைப்பதில்லை. ஆனாலும், வாகனத்தை வீதியில் செலுத்தியவுடன் எதிர்பாராத விதமாக விபத்துக்களை சந்திக்க நேரிடுகின்றன.



பாதசாரிகளது கவனயீனமான நடத்தை, வீதிப் பாதுகாப்புச் சட்டங்களை உதாசீனம் செய்தல், மது போதையில் வாகனம் செலுத்துதல், வாகனங்களை செலுத்தும் போது கையடக்கத் தொலைபேசிகளை (திறன் பேசி) பயன்படுத்தல், சாரதிகளுக்கு திடீரென்று நித்திரை வருதல், சாரதிகளின் உதாசீனமான போக்குகள் மற்றும் முறையாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறாமல் இலஞ்சம் கொடுத்து பெறல் என்று விபத்துக்களுக்கான காரணங்களைக் கூறலாம். அதிலும் இலங்கையில் பொதுப் போக்குவரத்தில் 16000 அளவிலான தனியார் பஸ் வண்டிகளும் 11000 அளவிலான இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டிகளும் தினமும் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. மறுபுறமாக மோட்டார் சைக்கில், முச்சக்கர வண்டி போன்றன விபத்துகளுக்கு காரணமான வாகனங்களாகும்.

எவ்வாறாயினும், இத்தகைய விபத்துகளின் போக்குகளை அவதானிக்கையில் பொலிஸ் - போக்குவரத்துப் பொலிஸார் கண்காணித்துள்ள விடயங்களாக இருப்பவை, பொதுப் போக்குவரத்து வாகனங்களால் ஏற்படும் விபத்துக்கள் அதிகமாக இருப்பதோடு உயிரிழப்புக்களுக்கும் இத்தகைய வீதி விபத்துகளே காரணமாக அமைந்துள்ளன. அத்துடன் சாரதிமாரின் கவனயீனமும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது என்ற விடயத்தை கண்டறிந்துள்ளனர். தனியார் போக்குவரத்து பஸ் வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் ஆகியவற்றை அசாதாரணமான முறையில் உதிரிப்பாகங்களை பொருத்தி அலங்கரித்திருப்பது, வாகத்திற்குள் அதிக ஒலி எழுப்பும் வகையில் வானொலி பயன்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்களும் விபத்துக்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

அதனால், கடந்த வாரம் முதல் போக்குவரத்து சோதனைப் பொலிஸார் நாட்டில் பல பாகங்களில் தனியார் பஸ் வண்டிகள் மற்றும் முச்சக்கர வண்டிகளை சோதனை செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சோதனையின் போது போக்குவரத்துச் சட்டங்களை மீறும் வகையிலும் வாகனம் செலுத்தும் பொதுச் சாரதியின் முன்னோக்கிய அவதானத்திற்கு தடையாக அமையக்கூடிய வகையில் செய்யப்பட்டுள்ள அலங்காரங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். குறிப்பாக எல்லை மீறும் வகையிலான பலவிதமான வர்ணங்களையுடைய மின் குமிழ்களைக் கொண்ட அலங்காரம், சாரதியின் முன் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள விதம் விதமான அழகுபடுத்தல்கள், கடுமையான ஒலி எழுப்பும் வகையிலான ஹோரன், வாகனத்தை செலுத்திக் கொண்டே செல்போனில் உரையாடும் வகையிலான உபகரணங்கள் என்று பலவிதமான அலங்காரங்களை பொலிஸார் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சில முச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள புத்தர் சிலைகளைக் கூட நீக்கி ஒதுக்குமாறு பணித்துள்ளனர். பொலிஸாரின் இத்தகைய செயற்பாடுகளின் காரணமாக தனியார் பஸ் ஓட்டுநர்கள், முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு இடையில் நாட்டில் பல இடங்களில் முரண்பாடுகள் நிகழ்ந்துள்ளன. தற்போது இந்த விடயம் தொடர்பாக அதற்கான சங்கம் தலையிட்டு பொலிஸாருக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கி உள்ளனர்.

ஆனாலும், சாரதிகளுக்கு ஒரு வார காலக்கெடு விதித்து, அதற்குள் இத்தகைய மேலதிகமான கருவிகள், உபகரணங்களை அப்புறப்படுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கை பொதுமக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கையாக அமைவதால் அது குறித்து பாராட்டப்பட வேண்டும். பாதுகாக்கப்படுவது பொதுமக்கள் மட்டுமல்லாது சாரதிகளும் தான் என்பதையும் மறந்து விட முடியாது.

ஆனாலும், இத்தகைய பொருட்களை விற்பனைக்காக இறக்குமதி செய்துள்ள வியாபாரிகளும் இந்த புதிய நடவடிக்கையால் பாதிக்கப்பட இருக்கின்றனர்.

வாகன அலங்கார உதிரிப்பாகங்கள் இந்தியா, தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளில் இருந்தே அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மறுபுறமாக நீண்ட தூர பிரயாணங்களை மேற்கொள்ளும் வகையிலான தனியார் பஸ் நடத்துநர்கள், சாரதிகளது உலகமே அவர்களது பஸ்வண்டிதான். வாழ்க்கையின் முழுமையான இன்பத்தையும் தாம் வைத்துள்ள அல்லது செலுத்தும் பஸ் வண்டியை அலங்கரித்து அழகு பார்ப்பதில்தான் கழிக்கின்றனர்.

அதிகாலையில் வீட்டில் இருந்து வெளியேறினால் இரவு 10.00 மணிக்குப் பின்னர் வீடு செல்கின்றனர். வீட்டுக்கு போகும் போது பிள்ளைகள் உறக்கத்தில் இருப்பார்கள்.

அந்தப் பிள்ளைகள் எழுந்து தந்தையை பார்க்க முன்னர் இரவோடு இரவாக வெளியேறி விடுகின்றனர்.



இவ்வாறான அலங்கார வேலைகளை பொலிஸார் தடுக்கின்ற போது சாரதிகள் மற்றும் பஸ் நடத்துநர்கள் மானசீக ரீதியாக பாதிப்புக்கு உள்ளாகின்றனர். போக்குவரத்துச் சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீறும் போது பாதிக்கப்படுபவர்கள் அனைவருமே. அனைவரதும் உயிர்களுக்கு விலை மதிப்பிட முடியாது.

இதனை சாரதிகள் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும். விலை மதிக்க முடியாத உயிர்களை பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும். ஆனாலும், இந்த விடயம் Clean Sri Lanka (தூய்மையான இலங்கை) வின் ஒரு அம்சம் என்றும், திடீர் என்று இவ்வாறான நடைமுறைகளை அனுமதிக்க முடியாது என்றும் சாரதிகள் தெரிவித்து வருகின்றனர்.

# இலங்கையில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியர்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

**சர்வதேச சட்டத்துக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ரிஷாட் எம்.பி வேண்டுகோள்**

கடந்த டிசம்பர் மாதம் இலங்கையில் தஞ்சமடைந்துள்ள மியன்மார் நாட்டின் ரோஹிங்கியா அகதிகள் தொடர்பில், சர்வதேச சட்டத்துக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் புகலிடம் கோரி வரும் ரோஹிங்கியா அகதிகளை திருப்பி அனுப்பும் தீர்மானம் குறித்து மிகுந்த கவலையுடன் உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

தங்கள் நாட்டில் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருக்கும் இந்த மக்களின் நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு, சர்வதேச மனிதாபிமான கொள்கைகளை நாம் கடைபிடிக்க வேண்டும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

மியான்மரில் நிலவும் கடுமையான வன்முறை மற்றும் அடக்குமுறை காரணமாக, ரோஹிங்கியா மக்கள் நம் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும்.

அவர்கள் இலங்கைக்கு வந்திருப்பது, உண்மையாகவே உயிர் அச்சுறுத்தலுக்காவே அன்றி, பொருளாதார புலம்பெயர்ந்தோராக அல்ல. ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகம் இந்த நபர்களின் அவலநிலையை அங்கீகரிக்கிறது, மேலும் மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் ஒரு நாடாக, அவர்கள் பாதிக்கப்படக்கூடிய நேரத்தில், அவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவது நம்மீது கடமையாகும்.



அகதிகள் மீதான சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுடன் எங்கள் நடவடிக்கைகள் ஒத்துப் போவதை உறுதி செய்ய வேண்டும், தனிநபர்கள் தங்கள் உயிருக்கு அல்லது சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் களை எதிர்கொள்ளும் இடங்களுக்கு திருப்பி அனுப்புவதைத் தடை செய்தல், இந்தக் கோட்பாட்டை நிலைநிறுத்துவதன் மூலம், பாதிக்கப்படக்கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி, சர்வதேச மனிதாபிமான தரங்களுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பை நிரூபிக்கவும் இது உதவும்.

வரலாற்று ரீதியாக, இலங்கை துன்புறுத்தலுக்கு ஆளாகியவர்களுக்கு புகலிடமளிக்கும் ஒரு நாடாக இருந்து வருகிறது. பல இலங்கையர்கள் யுத்த காலங்களில் வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துள்ளனர். ரோஹிங்கியா அகதிகளின் தற்போதைய நிலைமை, கடந்த காலத்தில் ஒரு தேசமாக நாம் எதிர்கொண்ட போராட்டங்களை பிரதிபலிக்கிறது என்பதை நினைவில்கொள்வது மிகவும் முக்கியமானது. மியன்மாரில் இந்த மக்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் இன்னும் ஆபத்தில் உள்ள நிலையில், அவர்களை வலுக்கட்டாயமாக மியான்மருக்கு திருப்பி அனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த அகதிகள் இலங்கையில் தங்கியிருக்கும் வரை, அவர்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும் எனவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் கைதிகளாகக் கருதப்படாமல், நமது அன்பும் ஆதரவும் தேவைப்படும் மக்களாகக் கருதப்பட வேண்டும்.

அத்தோடு அகதிகள் தங்களுக்கு மீள்குடியேறக்கூடிய பொருத்தமான, பாதுகாப்பானதாகக் கருதப்படும் மூன்றாவது நாட்டை அடையாளம் காண்பதற்கு, ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைப்பது பொருத்தமானதாக இருக்கும் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மதுரங்குளி ஸ்ரீமாபுரம் பத்தாம் கட்டை தாக்குதல் :**

# சம்பவ இடத்திற்கு விரைந்த பாராளுமன்ற உறுப்பினர் பைஸல்



**(எம்.எச்.எம்.சியாஜ்,எம்.யூ.எம்.சனூன்)**

மதுரங்குளி ஸ்ரீமாபுரம் பத்தாம் கட்டைய எனும் கிராமத்தில் வீடு ஒன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ள சம்பவமொன்று புதன் (07) இரவு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது மது போதையில் வந்த குழுவினர் வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதுடன் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டியையும் சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது எட்டு வயது சிறுமி ஒருவர் காயம் அடைந்த நிலையில் புத்தளம் தள வைத்திசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் பற்றி கேள்வியுற்ற புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஜே. எம். பைஸல் சம்பவ இடத்திற்கு உடன் விஜயம் செய்து தாக்குதல் சம்பவம் பற்றி கேட்டறிந்துடன் உடனடியாக மதுரங்குளி பொலிசாருடன் தொடர்பு கொண்டு விசாரணை மேற்கொண்டு தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்ற குழுவினரை கைது செய்யுமாறு வேண்டிக் கொண்டதுடன் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் பணிப்புரை விடுத்தார்.

மேலும் இக்குழுவினர் இதற்கு முன்பும் இக்கிராம மக்களை இவ்வாறு தாக்கி, அச்சுறுத்தி வந்துள்ளமை பற்றியும் பாராளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் முறையிட்டமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு மில்லியனுக்கும் அதிக பெறுமதிமிக்க பூச்சி கொள்ளிகளை கைப்பற்றிய அதிகாரிகள்

**(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)**

இரகசியமான முறையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட நான்கு மில்லியனுக்கும் அதிகமான பெறுமதிமிக்க பூச்சிக்கொள்ளிகள் மற்றும் களைநாசினிகளை கல்கிரியாகம புப்போகம பகுதியில் (07) கைப்பற்றியுள்ளதாக வடமத்திய மாகாண விவசாய பிரதி பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

நீண்ட காலமாக உள்ளூர் நிறுவனங்களின் வர்த்தக நாமங்களுடன் போதியிடப்பட்டு கல்கிரியாகம புப்போகம பகுதியில் மிக உயர்ந்த மட்டத்தில் விநியோகம் செய்யப்பட்டு வந்துள்ளது.

பேராதனை பூச்சிக்கொள்ளி பணியகம் மற்றும் வடமத்திய மாகாண விவசாய பிரதி பணிப்பாளர் அலுவலக அதிகாரிகளும் இணைந்து குறித்த களஞ்சியசாலையை ஆய்வு செய்த போது இதனை கைப்பற்றியுள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில் குறித்த களஞ்சியசாலையை சோதனை யிட்ட போது உள்ளூர் வர்த்தக நிறுவனங்களின் பிரிண்டிங் பேப்பர் நிரம்பிய பெட்டிகள் ஏராளமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கடத்தலை மேற்கொண்ட களஞ்சியசாலை உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் . அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பூச்சிக்கொள்ளி விதிகளின்படி இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாக பிரதி பணிப்பாளர் அலுவலக விவசாய ஆலோசகர் குணவர்தன மேலும் தெரிவித்தார்.

**நஸீஹா ஸரூக் எழுதிய "பதுரியாவின் சுவடுகளைத் தேடி"**

# வரலாற்று நூல் வெளியீட்டு விழா





**(பாரா தாஹீர்)**

பதுரியா மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நஸீஹா ஸரூக் அவர்கள் எழுதிய "பதுரியாவின் சுவடுகளைத் தேடி "வரலாற்று நூல் வெளியீடு கல்லூரி அதிபர் ஏ. எல். ஏ.ரஹ்மான் தலைமையில் மாவனல்லை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் வெளியிடப்பட்டது.



இதில் விசேட அதிதியாக கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் நளீம் ஸாலி மற்றும் கிருங்கதெனிய, பள்ளிவாசல் நிர்வாக தலைவர் பொறியாளர் அஸ்ஹர், கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், ஊர் பிரமுகர்கள், நலன்விரும்பிகள், என பலரும் கலந்து சிறப்பித்தனர் .

# ஆற்றல் உள்ள பெண்களின் அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப்பின் நான்காவது தேசிய மாநாடு







**(பாரா தாஹீர்)**

"குடும்ப கட்டமைப்பை பேணுபவளே ஆற்றலுள்ள ஆளுமைப் பெண் " எனும் தொனிப் பொருளில், இலக்கிய வித்தகரும்,அமைப்பின் தலைவியுமான சம்மாந்துறை மஷூரா சுகுர்தீன் தலைமையில் திருகோணமலை ஜூபிலி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். எம்.நஸீர் , மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சின் "நிதி மற்றும் திட்ட அமுலாக்கல் சட்ட ஒழுங்கு படுத்தல், உள்ளூராட்சி நிர்வாக கிராம அபிவிருத்தி சுற்றுலாத்துறை மற்றும் தொழிற் சாலை அமைச்சின் செயலாளரான இஸட். ஏ. எம். பைஸல் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் விஷேட அதிதியாகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறையைச் சேர்ந்த ஏ.எப். எம்.அஸ்ரப் சிறப்பு அதிதியாகவும், அம்பாறை மாவட்ட கலாச்சார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ .எல் .தௌபீக், திருகோணமலை ஸாஹிரா கல்லூரி அதிபர் எம். எம். எம். முஹைஸ், ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதில் "பெண்ணெனும் பேராறு" எனும் தலைப்பில் சிறப்பு கவியரங்கொன்று நடைபெற்றதோடு அவரி சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெற்றது.

# "சுஹதாக்களை சுமந்த சந்தூக்குகள்" சம்மாந்துறையில் நினைவு நிகழ்வு











(ஏ.ஏ. அன்ஷிப்)

மாவடிப்பள்ளி – காரைதீவு பிரதான வீதியில் கடந்த நவம்பர் 26 அன்று ஏற்பட்ட வெள்ளத்தினால் தரட்பரண்ட உளவு இயந்திர விபத்தில் வெள்ளத்தில் உயிரிழந்த 08 பேரை நினைவு கூர்ந்தும், வெள்ள நீரில் ஜனாஷாக்களை ஜனாஸ ாக்களை தேடும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் "சுஹதாக்களை சுமந்த சந்தூக்குகள்" எனும் நிகழ்வு அண்மையில் (05) நிகழ்வு சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம்பெற்றது.

மௌலவி ஏ.எம். பௌஸ்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அஷ்ஷேஹ், ஐ.எல். அப்துல் முனாப் இனை மலராசிரியராகக் கொண்ட சுஹதாக்களை சுமந்த சந்தூக்குகள்" எனும் நினைவு மலர் மற்றும் மன்ஸில் என்பவும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ். எல்.எம். ஹனிபா, பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகள், வர்த்தகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் உட்பட மீட்பு பணியில் ஈடுபட்ட அமைப்புகள், உயிரிழந்த 08 பேரின் குடும்பங்கள், அமைப்பின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக அமைப்பின் செயலாளர் கே.எல்.எம். ஹிஸாம் செயலாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி தள வைத்தியசாலைக்கு விஷேட பொது வைத்திய நிபுணர்



*கற்பிட்டி தள வைத்தியசாலைக்கு முதன் முறையாக நிரந்தர விஷேட பொது வைத்திய நிபுணராக வைத்தியர் டிலத்தீரீ இஷான் கமாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இவர் உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு புதன்கிழமை (08) கற்பிட்டி தள வைத்தியசாலையின் அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் கற்பிட்டி தளவைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் தனஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.*

*இந்நிகழ்வில் கற்பிட்டி தள வைத்தியசாலையின் வைத்தியர்கள், பிரதம தாதிமார், வைத்தியசாலையின் ஏனைய அதிகாரிகள், வைத்திய சாலை முகாமைத்துவ உத்தியோகத்தர் மற்றும் தள வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் முன்னிலையில் கற்பிட்டியின் முதலாவது நிரந்த பொது வைத்திய நிபுணர் (VP) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டதுடன் புதிய ஐந்து மாடி கட்டிடத்தை யும் பார்வையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.*

**(எம் எச் எம் சியாஜ், றிஸ்வி ஹுசைன், எம் யூ எம் சனூன்)**

# வலம்புரி கவிதா வட்டத்தின் 107 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 107 ஆவது கவியரங்கம் இம்மாதம் (13) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலய தமிழ் கணித பாட ஆசிரியர் கவிஞர் மினுவங்கொட ஏ. சிவகுமார் தலைமையில் கவியரங்கு நடைபெறும். ஸ்தாபக உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர் கனி முன்னிலை வகிப்பார். கவியரங்க ஏற்பாடுகளை வகவத் தலைவர் நஜ்முல் ஹுசைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், பொருளாளர் ஈழகணேஷ் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

## வாசிப்பீரக! 19



பிஸ்தாமி அஹமத்

# வாசிப்பும் மொழிபெயர்ப்பும்

வாசிப்பு எமது அறிவை, சிந்தனையை மாத்திரம் போசிக்கின்ற ஓர் அம்சம் அல்ல மாறாக இரு வேறுபட்ட கலாசாரங்களை பண்பாடுகளை நாகரீகங்களை இணைத்து விடுகின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாட்டையும் அது மேற்கொள்கின்றது.

வாசிப்பும் மொழிபெயர்ப்பும், இரு வேறுபட்ட மொழிகளோடு தொடர்பான ஓரம்சம். குறைந்தபட்சம் இருமொழிப் பாண்டித்தியம் உள்ளவர்களால் மட்டுமே இதனை கனகச்சிதமாக சிறப்பாக செய்ய முடியும். அதற்கு இரு வேறுபட்ட மொழி மீதான வாசிப்பும் அவசியம். இருவேறுபட்ட மொழிகளிலும் வெளியான பிரபல நூல்கள் குறித்த அறிமுகமும் அவசியப்படுகின்றது.

இரண்டு மொழிகளை இணைத்துப் பிணைத்து விடுகின்ற கலாச்சார பாலமாக வாசிப்பும் மொழிபெயர்ப்பும் அமைகின்றது.

ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழிமாற்றம் அல்லது பரிவர்த்தனை செய்யப்படுவது என்பது ஒரு கலாச்சாரத்தை இன்னொரு கலாச்சாரத்திற்கு அறிமுகம் செய்து விடுகின்ற காத்திரமான பணியாகும்.

ஒரு மொழியில் தேர்ச்சி பெறுவது என்பது குறிப்பிட்ட அம் மொழியின் கலாச்சார கூறுகள் மூலங்கள் பண்பாடுகள் பாரம்பரியங்கள் அனைத்திலும் பரீட்சயம் கொள்வதாக அமைகின்றது. அத்தகைய பரீட்சயத்தை பயன்படுத்தி இன்னொரு மொழிக்கு அதனை நகர்த்தி விடுகின்ற பொழுது இரண்டு கலாச்சாரங்களும் இருமொழி உறவுகளும் மேம்படுவதனை காணலாம். இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய இரு மொழி கலாச்சார ஈடுபாடு, இணைவு என்பது சமாதான சகவாழ்விற்கும் பங்களிப்புச் செய்யக்கூடிய அம்சமாக இருக்கிறது. அதேபோல ஒரு சமூகத்தின் மீது இன்னொரு சமூகம் மூடுண்ட சிந்தனையை வளர்க்காமல் கலை கலாசாரம் இலக்கியம் என்ற அடிப்படையில் திறந்த சமூகமாக விரிவான உரையாடல்களை கலாசார பரிவர்த்தனைகளை அறிவு கையளிப்புகளை பகிர்ந்து கொள்வதற்கான ஊடகமாகவும் இந்த மொழிபெயர்ப்பு முறைமை அமைகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் ஊன்று கோலாக இருப்பது வாசிப்பு தான். இரு மொழிப் பாண்டித்தியமும் தேர்ச்சியும் நிபுணத்துவமும் பெற்ற கலை ரசனை மிக்க எழுத்தாளர்கள் நிச்சயம் ஒரு மொழியில் வாசித்து அனுபவிக்கின்ற விடயத்தை அடுத்த மொழிக்கு கொடுப்பதற்கு தம்மை தயார்படுத்தி வைத்திருப்பர். அதனை காலத்தின் கட்டாயத் தேவையாகவும் கருதி செய்வது செய்விப்பது வாசிப்புதான்.

இப்பணியை செய்வதற்கு இத்தகைய இரு மொழி வாசிப்பே ஊக்கமளிக்கின்றது.




நாச்சியாதீவு பர்வீன்

# கடலோடியோடு ஒரு கைகுலுக்கல்..

–தீபா ஜானகிராமன்–

நீண்ட நாட்களாகத் தேடிக்கொண்டிருந்த புத்தகம் 'கடலோடி'. அச்சில் இல்லை என்றார்கள். கடந்த வாரம் விஷ்ணுபுரம் நிகழ்வுக்கு சென்றிருந்தபோது என்னுடைய அண்ணன் ஜா.ராஜகோபாலன் கையில் இந்தப் புத்தகத்தைப் பார்த்ததும் "பார்த்துட்டு தர்றேன்' என்று வாங்கினேன். தரும்போதே தயக்கத்துடன் தான் தந்தார். "பார்த்துட்டு தந்துரனும்.." சரி என்று சொன்னேன். புத்தகம் இப்போது வரை என்னிடம் தான் இருக்கிறது.

இந்தப் புத்தகத்தை சிறுவாணி வாசகர் மையம் வெளியிட்டிருக்கிறார்கள். அரிய புத்தகங்களை அச்சுக்குக் கொண்டு வருவதை பணியாகக் கொண்டிருக்கிறார்கள்.

'கடலோடி' எழுதிய நரசய்யாவின் 'மதராசப்பட்டணம்' என்கிற புத்தகத்தை சில வருடங்களுக்கு முன்பு படித்தேன். இவருடைய மற்றொரு புத்தகம் 'ஆலவாய்'. யார் பதிப்பித்திருக்கிறார்கள் என்று தெரிந்தவர்கள் சொல்லவும். அதைப் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் இருக்கிறது.

நரசய்யா 1950களில் கப்பற்படையில் பொறியாளராக சேர்கிறார். அதற்கான நேர்காணல் நடக்கிறபோது "கப்பலைப் பற்றி என்ன தெரியும்?" என்று அவரிடம் ஆங்கில அதிகாரி கள் கேட்கிறார் கள். "கப்பலைப் படத்தில் பார்த்திரு க்கிறேன்" என்கிறார். திரையில் பார்த்தது தான் இவருக்கும் கப்பலுக்குமான முதல் அறிமுகம். போர்க்கப்பல் என்பதால் அதற்கான பயிற்சி கூடத்தில் சேர்வதில் இருந்து நமக்கான வாசிப்புத் தொடங்கு கிறது. அந்தப் பயிற்சிக் கூடத்தில் கடைபிடிக்கப்படுகிற ஒழுக்கம், ஊரைத் தேடுவது, எனத் தொடங்குகிறார். முதன்முதலாக பெரிய கப்பலைப் பார்க்கும்போது கொண்ட பிரமிப்பு, கடல் கொந்தளிப்பில் ஏற்படுகிற மன, உடல் கொந்தளிப்புகள் என ஒவ்வொன்றையும் சொல்லிக் கொண்டே போகிறார்.


என்னை மிகவும் ஈர்த்தது பயிற்சிக்காக வைக்கப்படுகிற சோதனைகளை அவர் விவரித்தப் பகுதி. இரண்டு கப்பல்கள் இடையே கயிறுகளைக் கட்டி, ஒரு கப்பலில் இருந்து மற்றொன்றுக்கு பொருட்களை எடுத்து வருவது. கீழே ஆர்ப்பரிக்கும் கடலைப் பார்க்கவே கூடாது என்பது தான் அந்தப் பயிற்சியில் முதலில் கற்றுத் தருவது. தேவைப்படும் நேரத்தில் அடுத்தக் கப்பலில் இருந்து எண்ணெயைக் கூட இப்படி கயிறில் தொங்கியபடி எடுத்து வருவார்களாம். இரவில் கப்பல்களில் இருந்து கயிற்று ஏணியை வெளியே தொங்கவிட, மற்றொரு கப்பலில் இருப்பவர்கள் அதைத் திருடிக் கொண்டு வரவேண்டும். இதில் எந்தக் கப்பலில் உள்ளவர்கள் வெற்றிபெறுகிறார்கள் என்பது பந்தயம். இவையெல்லாம் நடுக்கடலில் நடப்பவை. மாலுமிகள் விழிப்பாக இருக்கிறார்களா என்பதற்கான பயிற்சி இது. இப்படி ஒவ்வொன்றுமே ஆச்சரியம் தரக்கூடியவை.

இந்தியச் சுதந்திரத்துக்குப் பிறகு இவர் இந்தத்துறையில் சேர்ந்ததால், நமது நாடு எப்படி இதில் அடுத்தடுத்த இடத்துக்குத் தன்னை மேம்படுத்திக் கொண்டது என்பதையுமே எழுதுகிறார். இந்தியாவில் கோவாவில் பயணம் தொடங்கி வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்றிருக்கிறார். நாற்பது நாட்கள் கடலிலேயே இருந்துவிட்டுத் தரையில் இறங்கும்போது கொண்டிருக்கிற மனநிலை, தரையிறங்கியதும் வீட்டில் இருந்து அனுப்பபட்ட கடிதங்களை மொத்தமாகப் பெற்று வாசிப்பது, ஒவ்வொரு நாட்டில் பழக்கவழக்கங்கள் என அருமையான டைரிக்குறிப்புகள்.

கடலையும், கடலோடிகளின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லி சில வார்த்தைகளை சொல்கிறார். அந்த வகையில் அருமையான சுயமுன்னேற்ற புத்தகமாகவும் கருதலாம்.

போர்க் கப்பல்கலிலும், வணிகக் கப்பல்களிலும், அளவில் எப்போதும் பெரியதாக இருக்கும் எண்ணெய் ஏற்றிச் செல்லும் டாங்கர் கப்பல்களிலும் பணிபுரியும் வித்தியாசங்களைச் சொல்கிறார். டாங்கர் கப்பல்களில் வேலை செய்பவர்கள் மருந்துக்குக் கூட வேறு நாடுகளைப் பார்க்க முடியாது. கடலில் மட்டுமே பயணம் செய்த கொண்டே இருக்க வேண்டும். தரையில் இருந்து வெகு தூரத்துக்கு இந்தக் கப்பல்கள் நிறுத்தப்பட்டு எண்ணெயை கைமாற்றிவிட்டு மீண்டும் கடலுக்கே சென்றுவிடும்.

ஷிப்ட் சமயத்தில் புத்தகம் வாசிக்க நேரமும் இருக்காது, படிக்கவும் கூடாது என்பதால், படித்தவற்றை மனதுக்குள் ஓட்டிப் பார்க்கும் தருணம் என்கிறார். உடனிருக்கும் மற்ற நாட்டினரிடம் அவர்களது இலக்கியத்தைப் பற்றிப் பகிர்ந்து கொள்கிற நேரமாக இதனை சொல்கிறார்.





நரசய்யாவின் அப்பாவைப் பற்றி சொல்ல வேண்டும். அவர் தான் வெவ்வேறு அனுபவங்களைப் பெறுபவன் தான் மனிதன் என்று இவரை இந்தப் பணிக்கு அனுப்பி வைக்கிறார். அவர் எழுதிய ஒரு கடிதம் பற்றி நரசைய்யா புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அத்தனை ஊக்கமானது அது.

கப்பல்களைப் பற்றி எழுதும்போது புரியாமல் போய்விடுமோ என்பதாலயே யாரும் எழுதுவதில்லை என்று சொல்லும் நரசய்யா, எதுவொன்றையும் விளக்க எளிய மொழியையே கைகொள்கிறார். அதனாலேயே படிக்க சுலபமாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கிறது.

கடல் ஒரு மனிதனுக்குள் என்னவாகப் பதிவாகியிருக்கிறது என்பதாகவே இதனை புரிந்து கொண்டேன். ஒரு புத்தகத்தைத் திருடுவது தவறில்லை என்று உணர்த்திய புத்தகங்களுள் ஒன்று இது!

# வெலிமடை ரபீக் எனும் பண்பான கவிஞன்!




ரபீக் நீ "காலம்'' ஆகிப் போனாய்!
அதிர்ச்சி ஆணியை அறைந்தது
"கவிரபீக் மறைந்தார் " எனும் சோகதே
ரபீக்நீ காலமாகிப்போனாய்
நாம் கவலைக்கடலுக்குள்
காணாமலாகிப் போனோம்...
"பூக்காலம்'' வெளியிட்டவனே!
உன்மறைவின் பெரும்பிரிவால்
சோகத் தீக்காயம் அளித்திட்டாயே...
சிறக்கசிறக்க சுவைக்கசுவைக்க
இனிக்கும்நின்கவிகள் எமக்கும் பிடிக்கும் !
"புதுக்கவிதைக்கு மரியாதை '
செலுத்தியவனே...!
உன் நூல் வெளியீட்டில் பெற்ற தாய்க்கு
பொன்னாடைபோர்த்தி கௌரவித்து
பாசத்தாய்கதும் மரியாதை
செலுத்தியவனே...!
நாடறிந்தநல்லதொரு "புதுக்கவி" ஞனே
வெலிமடை ஊர்தந்த பல்துறைஆளுமையே!
பெருமை ஆணவம் ஆம்பாவம் எனில்
"கிலோ என்னவிலை" என்வகேட்பவனே!
நற்குணம்பலமிக்க பண்பானகவியே.
விரும்போடு அழைப்பாய்...
இனிப்பாய்க் கதைப்பாய்...
'வாஹிட்வாஹிட் எனவிளிப்பது
இப்போதும் அசரீரியாய் ஒலிக்கிறதே...
அதைநினைத்தால் சோகத்தின் பாரத்தில்
கிலோக்கணக்கில் வலிக்கிறதே...
"இன்னார்க்கு இந்நாள் என்று...
எழுதிவிட்டான் இறைவன் அன்று
இறைவிதிப்படிதானே நடக்கிறது இன்று...
ப்ரியமானவனே அன்பானவனே
"நெஞ்சுக்குநெருக்கான கவிநண்பனே"
ரபீக்நீ காலமாகிப்போனாய்
ஆம் "கவிதைக் காலம் ஆகிப் 'போனாய்...!
ஈர்கரம் எந்தியே
ஓர்இறையை வேண்டியே
சீர்வர்க்கம் சேர்த்திட
பிரார்த்திக்கிறோம் ரபீக்உனக்காய் –

கோட்டைமுனை" முத்துமணி"
– ஏ.வாஹிட் ஏ.குத்தூஸ் – பதுளை.

## பலஸ்தீன...

(06ம் பக்கத் தொடர்ச்சி)

எகிப்து நாடு மாறியது. இந்த ஒப்பந்தம் பாலஸ்தீனியர்களுக்கு பேரழிவைத் தந்தது. சர்வதேச அளவில் மக்கள் மத்தியில் எழும் போராட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் க்ரைஸிஸ் குரூப் என்ற தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த மௌனின் ரப்பானி என்பவர், ப்ரூக்கிங்ஸ் நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், எகிப்து மற்றும் இஸ்ரேலிய அரசுக்கிடையில் உள்ளுறைந்திருந்த முரண்பாடு இல்லாமல் போனதால், பாலஸ்தீனியர்கள் வசமிருந்த இராஜதந்திர பலத்தின் முக்கியமான கூறுகளை இழக்க நேரிட்டது என்று கூறியுள்ளார். அதன்பிறகு, இஸ்ரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையிலான மோதல் என்ற நிலையிலிருந்து இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதலாக மாறியது.

### இஸ்ரேல்-பாலஸ்தீன மோதல்

1970-களின் பிற்பகுதியிலிருந்து, இஸ்ரேல் மேற்குக் கரையிலும், காஸாவிலும் குடியேற்ற காலனிகளை நிறுவத் தொடங்கியது. ஆம்னஸ்டி இன்டர்நேஷனல் என்ற தொண்டு நிறுவனம் இந்த குடியேற்றம் பற்றி "பெருமளவில் நடந்த மனித உரிமை மீறல்" என்று கூறியிருந்தது. கடந்த 50 ஆண்டுகளாக, இஸ்ரேல் அரசாங்கம் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய நிலத்தில் இஸ்ரேலியர்களை குடியேற்றி பாலஸ்தீனியப் பகுதிகளை காலனிகளாக மாற்றி வருவதை தேசியப் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒருங்கிணைந்த அம்சம் என்று கூறி வருகிறது. இவ்வாறிருக்க, 1977 ஆம் ஆண்டின்போதே, அப்போதைய இஸ்ரேலியப் பிரதமர் மெனாசெம் பெகின், இஸ்ரேலியர்களை குடியேற்றி தங்களது நிலப்பரப்பை விரிவுபடுத்துவதென்பது தேசப் பாதுகாப்புடன் தொடர்புடையது எனக் கூறுவதைக் காட்டிலும் உண்மையில் அந்த நிலப்பரப்பு இஸ்ரேலுக்கே சொந்தமானது என்ற கருத்தியலின் மீதிருந்த உறுதியான நம்பிக்கையின் பேரில்தான் முன்னெடுக்கப்படுகிறது என்பதை தெளிவுபடுத்தினார்.

1987-இல், பாலஸ்தீனியர்களை விரட்டியடிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட இஸ்ரேலிய அரசின் குடியேற்றக் கொள்கைகளால் கொதித்தெழுந்த பாலஸ்தீனியர்கள் முதல் இன்டிபதா அல்லது எழுச்சியைத் தொடங்கினர். ஒரு வருடம் கழித்து, நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) அல்ஜீரியாவிலிருந்து ஒரு சுதந்திரமான பாலஸ்தீனிய அரசை நிறுவுவதாக அறிவித்தது. இருப்பினும், முதல் இன்டிபதாவின் (எழுச்சியின்) போதே PLO பெரிதும் எதிர்பார்த்த பாலஸ்தீனிய அரசை உருவாக்க முடியவில்லை என்பது மட்டுமல்லாது சர்வதேச அளவில் இஸ்ரேல் அரசு விரும்பிய அங்கீகாரமும் கிடைக்கவில்லை. இந்த காலகட்டத்தில்தான், ஹமாஸ் எனப்படும் இஸ்லாமியப் போராளிகளின் இயக்கம் துவங்கப்பட்டது.

போரிடும் இரண்டு பிரிவுகளுக்கு இடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக, அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன், ஒஸ்லோ உடன்படிக்கை மூலமாக இராஜதந்திர அளவிலான பேச்சுவார்த்தையை முன்னெடுத்தார். 1993 மற்றும் 1995-ஆம் ஆண்டுகளில் கையொப்பமிடப்பட்ட இந்த உடன்படிக்கைகள் நீண்டகாலமாக நடந்து வந்த மோதலுக்கு எதிர்பார்த்த தீர்வை தரும் என நம்பப்பட்டன. உடன்படிக்கையின் ஒரு பகுதியாக, பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) இஸ்ரேல் அரசை அங்கீகரிக்க ஒப்புக் கொண்டது, அதற்கு ஈடாக, பாலஸ்தீன மக்களின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக PLO-I இஸ்ரேலும் அங்கீகரித்தது. மேலும், ஒஸ்லோ உடன்படிக்கைகள் மேற்குக் கரையிலும், காஸாவிலும் உள்ள ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளை நிர்வகிப்பதற்கு ஒரு புதிய சட்ட ரீதியிலான வடிவத்தையும் அறிமுகப்படுத்தியது.

ஒஸ்லோ உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டதைத் தொடர்ந்து தோன்றிய ஆரம்பகால நம்பிக்கையும், – 2000-ஆம் ஆண்டில் இரண்டாம் இன்டிபதா அல்லது இராண்டாவது எழுச்சி வெடித்ததால் – குறுகிய காலமே நீடித்தது. ஒஸ்லோ உடன்படிக்கைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான வாக்குறுதி இந்த எழுச்சியோடு முற்றிலுமாக முறிந்து போனது. இந்த இரண்டாவது எழுச்சி நான்கு ஆண்டுகளாக நீடித்தது. குண்டுவெடிப்புகள், தற்கொலைத் தாக்குதல்கள் ஒரு பக்கமும், இஸ்ரேலின் வலுவான இராணுவத் தாக்குதல்களுமாக இரண்டாவது எழுச்சி நடந்தேறியது. இது இஸ்ரேலியர்கள், பாலஸ்தீனியர்கள் என இரு பிரிவினருக்குமே சொல்லொன்னா துன்பங்களை ஏற்படுத்தியது. மோதல் தீவிரமடைந்ததால், ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரிடையே (பிஎல்ஓ) அரசியல் ரீதியிலான பிளவுகள் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கின.

1947-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பிரிவினைத் திட்டத்திற்கு முன்னர் 94 சதவீத நிலத்தை பாலஸ்தீனியர்கள் வைத்திருந்த நிலையில், இப்போது அதில் சுமார் 12 சதவீத நிலத்தை மட்டுமே பாலஸ்தீனியர்கள் நிர்வகித்து வருகின்றனர்.

2007-ஆம் ஆண்டில், பாலஸ்தீனப் பகுதிகள் அரசியல் ரீதியாக பிரிக்கப்பட்டது ஹமாஸ் காசா மீதான கட்டுப்பாட்டைப் பெற்றது பாலஸ்தீன விடுதலை இயக்கம் (ீடுமு) மேற்குக் கரையில் தனது பிடியைத் தக்க வைத்துக் கொண்டது. மேற்குக் கரையும், காசாவும் பிரிக்கப்பட்டதற்கு மக்கள் மத்தியில் அதிருப்தியே வெளிப்பட்டது. ஜீன் 2023-ல் பாலஸ்தீனிய கொள்கை மற்றும் மாதிரி ஆய்வு மையம் நடத்திய ஆய்வின்படி, 1948-இல் இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்ட பிறகு ஏற்பட்டுள்ள இந்த பிரிவினை தங்களுக்கு பெருந் தீங்கையே விளைவிக்கும் என்று மூன்றில் ஒரு பங்கு பாலஸ்தீனியர்கள் கூறியுள்ளனர். இந்த பிரிவினைக்கு பிற்பாடு, பிஎல்ஓ மற்றும் ஹமாஸ்க்கு இடையேயான உறவு என்பது சில நேரங்களில் நேரடி மோதலுக்கும் சில நேரங்களில் தயக்கத்துடன்கூடய ஒத்துழைப்பிற்கும் இடையே ஏற்ற இறக்கங்ளுடன்தான் நகர்ந்துள்ளது. எவ்வளவுதான் தங்களுக்கிடையில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக காசாவைப் பாதுகாக்கும் ஹமாஸின் உரிமைக்கு PLO எப்போதுமே ஆதரவு தந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான எல்லைகளில் ஏற்பட்டுள்ள பலதரப்பட்ட மாற்றங்களை ஆராயும்போது, இப்போது வெடித்துள்ள மோதல் என்பது அரசியல் – மதம் – பிராந்திய அளவிலான மோதல்கள் என்ற பல அடுக்கிலான திரைமறைவின் பின்னால் ஆழமாக புதைந்துள்ளது என்பது தெளிவாகிறது. பல தலைமுறைகள் கடந்த பின்னும்கூட மேற்குக் கரையும், காசா பகுதியும்தான் இந்த மோதலின் குவிமையமாக நீடித்து வருகிறது. மோதலில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கும் இந்த நிலப்பரப்புகளே நிரந்தரமான போர்க்களமாக நீடித்து வருகிறது.

## மனநலமும் ஆலோசனையும் 64

# பொறுப்பற்ற வாலிபர்களும் பொறுப்பற்ற பெற்றோரும்

வாலிபப் பருவத்தின் ஆரம்ப ஆண்டுகள் மிகவும் சவாலானதாக இருக்கும், அதை கவனமாகக் கையாள்வதில் பெற்றோரின் வழிகாட்டல் அடிக்கடி தேவைப்படும். இருப்பினும், பெற்றோர்கள் தங்கள் பருவ வயது பிள்ளைகளின் வளர்ச்சியில் பொறுப்புணர்வுடன் பங்கேற்கவில்லை என்றால், அந்த பருவத்தில் அவர்கள் செய்யும் எல்லாவற்றையும் நியாயப்படுத்த முயற்சிப்பார்கள்.

பிழையானவற்றை சரியென்று உண்மைப்படுத்துவார்கள்.

பலவற்றை மறைமுகமாக செய்வதில் ஆர்வம் காட்டுவார்கள்.

எதையும் எப்படியும் செய்யலாம் என்று நினைத்துச் செய்வார்கள்.

இந்தப் போக்கு அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு பேரழிவாக மாறி, அவர்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய ஓட்டையை விட்டுச் சென்றுவிடும். இதை அவர்கள் யோசிப்பதில்லை.

நமது சில இளைஞர்களின் பொறுப்பற்ற நடத்தைகள் சமூகத்தின் பல்வேறு அம்சங்களைச் சேதப்படுத்துவதை நாம் காண்கிறோம். சில சமயங்களில் அவர்களின் கவனக்குறைவான மற்றும் பகட்டான நடத்தைகள் மற்றவர்களின் உடலுக்கும் உடமைக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பது போன்று சிலசமயங்களில் அநியாயமாக மனித உயிரை காவு கொல்வதில் முடிவடைந்து விடுவதை பார்க்கிறோம்.

சில வாலிபர்களின் பொறுப்பற்ற நடத்தையால் நமது தலைமுறைகள் எவ்வளவு மோசமாக அழிந்து வருகின்றன என்பதைக் கண்டு நாங்கள் மனதால் வருத்தப்படுகிறோம்.

பொறுப்பு என்பது ஒவ்வொருவரின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். அது ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு அழகான, அவசியமான திறனும் ஆகும்.

ஒரு வாலிபன் பொறுப்புடன் நடந்து கொள்ளத் தவறினால் அல்லது பொறுப்பை அத்துமீறினால், சமூகம் அவனை சபிக்க ஆரம்பிக்கும். தாய் தந்தை குடும்பம் அனைவருமே அவனது பொறுப்பற்ற நடத்தைக்கு அநியாயமாக வகை கூற வேண்டி வரும். தெரிந்தவர் தெரியாதவர் என எல்லோரின் கோபத்தையும் சாபத்தையும் சுவைக்க வேண்டிவரும்.

பொறுப்பற்ற முட்டாள்கள், மோசமான சாத்தான்கள் என்று அவர்கள் முத்திரை குத்துவார்கள்.

மானம் மரியாதை ஒவ்வொருவருக்கும் முக்கியமாகும். பணம், பொருள், சமூக அந்தஸ்து போன்ற எதுவாலும் இழந்துபோன மரியாதையை வாங்கிவிட முடியாது.

பெற்றோர்களே...!

எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் பொறுப்புணர்வுடன் நடப்பதன் அவசியத்தை உங்கள் பிள்ளைகளுக்கு சிறுவயதில் இருந்தே சொல்லிக் கொடுங்கள்.

எவ்வளவு விரைவில் தொடங்குகிறோமோ அவ்வளவு எளிதாக அதை உருவாக்க முடியும்.

தவறவிட்டால் சந்தேகத்துக்கு இடமின்றி என்றோ ஒரு நாள் விட்ட தவறை எண்ணி நாங்களே எங்கள் கைகளை கடித்துக்கொள்ள வேண்டிவரும்.

பிள்ளைகளுக்காக எல்லாவற்றையும் செய்யாமல் அவர்களுக்கான விடயங்களை அவர்களாகவே செய்துகொள்ள ஊக்கம் கொடுங்கள். மற்றவர்களுக்கு தொந்தரவு இல்லாமல் நடந்து கொள்வதன் முக்கியத்துவத்தை ஆரம்பத்தில் இருந்தே அடிக்கடி நினைவுபடுத்துங்கள்.

அவர்கள் பொறுப்புடன் வாழ தங்களை பழக்கப்படுத்திக் கொள்வது, பொறுப்பான எமது செயல்களில் இருந்து ஆரம்பிக்கிறது என்பதை நினைவில் கொள்வோம்.

("பொறுப்புடன் இருக்க எப்படி கற்றுக் கொடுப்பது" என்பது பற்றிய சில முறைகளை இன்ஷாஅல்லாஹ் அடுத்த கட்டுரையில் தெரிந்து கொள்வோம்)



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---




**பயாஸா பாஸில்**



நாம் கட்டாயம் புரிந்து வைக்க வேண்டிய ஆண்கள் மற்றும் பெண்களின் உளவியல் உண்மைகள்

பெண்கள் எப்போதுமே மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வேறு ஒன்றை சொல்லும் சுபாவம் கொண்டவர்கள்.

அதாவது புரியும் படி சொல்வதானால், பெண்கள் பேசும் பேச்சுகளுக்கு நீங்கள் சொல்லுக்கு சொல் விடையோ விளக்கமோ அளிக்க முற்படக்கூடாது. அது உங்களை முடிவில்லாத பிரச்சினைகளின் பால் அழைத்துச் செல்லும்.

உதாரணமாக, அவள் உங்களிடம் "எனக்கு இன்று அலுப்பாக உள்ளது. வீட்டுக்குள் இருந்து போதுமாகிவிட்டது" என்று சொன்னால் "என்னை வெளியே கூட்டிச் செல்லுங்கள்" என்று சொல்ல வருகிறாள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அல்லது "இன்று சமைக்க அலுப்பாக உள்ளது" என்று சொன்னால் "வெளியே போய் சாப்பிடுவோமா" என்று கேட்கிறாள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதாவது அவள் சொல்லும் வார்த்தைகளை விட அவள் என்ன சொல்ல வருகிறாள் என்பதை ஆண்கள் புரிந்துகொள்வது அவசியமாகும்.

ஆனால் ஆண்கள் இதற்கு முற்றிலும் எதிர்மாற்றமானவர்கள். சொல்வதை நேரடியாக சொல்லும் சுபாவம் கொண்டவர்கள்.

ஆண் சொல்லும் வார்த்தைகளிலேயே அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதை பட்டென்று தெரிவித்துவிடுவான்.

உதாரணமாக அவன் "நான் இன்று களைப்பாக இருக்கிறேன்" என்று சொன்னால் அவனுக்கு இப்போது ஓய்வு தேவை என்பதுதான் அங்கே அர்த்தம்.

வார்த்தைகளை புரிந்துகொள்வதில் தான் வாழ்க்கையே உள்ளது.

**இம்ரான் பாரூக்**

---











## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் பூரண அனுசரணையுடனும் "GEM SRI LANKA 2025 - BENTOTA" சர்வதேச மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரண கண்காட்சி 08ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

அமைச்சர் சுனில் ஹந்துன்ஹெத்தி உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை தலைவர் உட்பட உயர் அதிகாரிகள், ஏற்றுமதி அபிவிருத்தி சபை உயர் அதிகாரிகள், சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அல்-ஹாஜ் மர்ஜான் பளீல், GEM SRI LANKA தலைவர் ஹில்மி ஹாஸிம், உப தலைவர் ரிஸ்வான் நயீம், செயலாளர் அஷ்கர் முபாரக், பொருளாளர் மிஷ்கர் முனவ்வர் உட்பட சங்க உறுப்பினர்கள்ஃ பேருவளை நகரசபை முன்னாள் உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அரூஸ் அஸாத், ஜாமியா நளீமிய்யா கலாபீட தலைவர் யாகூத் நளீம், அதன் முதல்வர் அஷ்ஷெய்ஹ். ஏ.ஸி அகார் முஹம்மத் (நளீமி), சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.என்.எம் ஷிஹாப் உட்பட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த சர்வதேச கண்காட்சியானது எதிர்வரும் 10ஆம் திகதி வரை ஆகிய தினங்களில் CINNAMON BENTOTA BEACH HOTELS வளாகத்தில் மிக விமர்சையாக நடைபெறவுள்ளது.

09ஆம் திகதி ஆரம்ப நிகழ்வில் எதிர்கட்சித் தலைவர் ஸஜித் பிரேமதாஸ கலந்து கொள்வார்.

நூற்றுக்கு மேற்பட்ட இரத்தினக்கல் கண்காசிக் கூடகங்களை உள்ளடக்கிய இக்கண்காட்சியில் இலங்கையின் முன்னணி மாணிக்க கல் பிரபல வியாபாரிகள், உள்நாட்டு, வெளிநாட்டு மாணிக்க கல் பிரபல ஏற்றுமதியாளர்கள் உட்பட பல துறை சார்ந்த பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை மாணிக்க கல் வர்த்தகத்தை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் முயற்சியாக 02வது தடவையாகவும் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01வது கண்காட்சி நடைபெற்றதோடு, உள்நாட்டு, வெளிநாட்டு முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர்.

2024 கண்காட்சி மிக வெற்றிகரமாக நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

2025ஆம் ஆண்டு கண்காட்சி, அதைவிட சிறப்பாக நடைபெற்று நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகிறது.



அரபாத் பஹுர்தீன்




# மேட் ஹென்றியின் வேகத்தினால் நியூசிலாந்திடம் வீழ்ந்தது இலங்கை

வெலிங்டனில் இடம்பெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணியை 9 விக்கெட்டுக்களால் மிக இலகுவாக வீழ்த்திய நியூசிலாந்து அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.

சுற்றுலா இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான வெள்ளைப் பந்து தொடரில் முதலில் நிறைவுற்ற 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை நியூசிலாந்து 2:1 என வெற்றி கொண்டிருந்தது. இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பித்திருந்தது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி கொண்ட நியூசிலாந்து அணி இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதற்கேற்ப முதலில் களம் புகுந்த இலங்கை அணிக்கு ஆரம்ப வீரரான அவிஷ்க பெர்ணான்டோ ஒரு புரம் நிலைத்திருக்க மற்றைய நம்பிக்குக்குறிய துடுப்பாட வீரர்களான பெத்தும் நிசங்க (9), குசல் மெண்டிஸ் (2) , கமிந்து மெண்டிஸ் (3) மற்றும் சரித் அசலங்க (0) என விரைவாகப் பெவிலியன் நடந்தனர்.

இருப்பினும் நிலைத்திருந்த அவிஷ்க பெர்ணான்டோ அரைச் சதம் கடந்து 56 ஓட்டங்களுடனும், ஜனித் லியனகே 36 மற்றும் வனிந்து ஹசரங்க 35 என ஓரளவிற்கு ஓட்டங்களை சேர்த்துக் கொடுக்க 43.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் மேட் ஹென்றி 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

தொடர்ந்து இலங்கை அணியால் நிர்ணயிக்கப்பட்ட 179 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய நியூஸிலாந்து அணி ஆரம்ப விக்கெட் ஜோடியான வில் யங் மற்றும் ரிச்சின் ரவீந்திர ஆகியோரின் அசத்தலான 93 ஓட்ட இணைப்பாட்டத்தால் வெற்றியை இலகுவாக நெருங்கியது. இந்நிலையில் ரிச்சின் ரவீந்திர 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இருப்பினும் களத்திலிருந்த வில் யங் ஆட்டமிழக்காமல் 90 ஓட்டங்களையும், சப்மேன் 29 ஓட்டங்களையும் பெற்று களத்திலிருக்க 26.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் மிக இலகு வெற்றி பெற்றதுடன் தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது. இலங்கை சார்பில் சமிந்து விக்ரமசிங்க ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தார். போட்டியின் நாயகனாக வேகத்தில் மிரட்டிய மேட் ஹென்றி தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

# ரியாதில் நடைபெற்ற இலங்கைத் தூதுவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டி



இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட "இலங்கைத் தூதுவர் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி – 2024" இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ரியாதிலுள்ள இலங்கைத் தூதரகம், ரியாதிலுள்ள இலங்கைக் கலாசார மன்றத்துடன் இணைந்து வரலாற்றில் முதல் தடவையாக "இலங்கைத் தூதுவர் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியை" வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது.

அணிக்கு 11 பேர் மற்றும் ஒரு சுற்றுக்கு 5 ஓவர் என்ற அடிப்படையில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியில் ரியாத் வாழ் இலங்கையர்களை உள்ளடக்கிய 25க்கும் மேற்பட்ட அணிகள் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்றன. டிசம்பர் மூன்றாம் திகதி முதல் 27ம் திகதி வரை இடம் பெற்ற இப்போட்டித் தொடர் 'ரியாத் ஸ்ரீலங்கன்ஸ்' மற்றும் 'கபுல்ஃப் லயன்ஸ்' ஆகிய அணிகளுக்கிடையிலான பரபரப்பான இறுதிப்போட்டியுடன் நிறைவடைந்தது.

இறுதிப் போட்டியில் அபார திறமையுடனும் குழு ஒருமைப்பாட்டுடனும் களமிறங்கி விளையாடிய 'ரியாத் ஸ்ரீலங்கன்' அணி "இலங்கைத் தூதுவர் கிண்ணத்தை" சுவிகரித்துக் கொண்டது. இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டத் தொடர் நாயகனாக 'கபுல்ஃப் லயன்ஸ்' அணியைச் சேர்ந்த திரு. அர்ஷத் அவர்களும், இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக 'ரியாத் ஸ்ரீலங்கன்' அணியைச் சேர்ந்த திரு. ரிபாஸ் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்த போட்டியின் மூன்றாம் இடத்தை 'க்ரீன் லேன்ட்ஸ்' அணி பெற்றுக்கொண்டது.

இறுதிச்சுற்றுத் தொடரின் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய தூதுவர் அமீர் அஜ்வத் அவர்கள், இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் கட்டியெழுப்பப்பட்டு 50 வருடம் நிறைவடைந்த ஆண்டாகிய 2024 ஆம் ஆண்டு முதல் ரியாதிலுள்ள இலங்கைத் தூ தரகம் ரியாதிலுள்ள இலங்கைக் கலாசார மன்றத்துடன் இணைந்து "இலங்கைத் தூ துவர் கிண்ணச் சுற்றுப்போட்டியை" வருடாந்தம் நடாத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அறிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய தூதுவர் அமீர் அஜ்வத் அவர்கள் கிரிக்கெட் விளையாட்டின் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற குழு உணர்வானது வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் இலங்கைச் சமூகத்திற்கு மத்தியில் நட்பையும், பரஸ்பர புரிந்துணர்வையும் வளர்ப்பதாக வலியுறுத்தியதுடன், சவுதி அரேபியாவானது FIFA – 2034 மற்றும் குளிர்கால ஆசிய விளையாட்டு – 2029 போன்ற மிக முக்கியமான சர்வதேச விளையாட்டுகளை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருப்பதன் ஊடாக உலகளாவிய விளையாட்டு மையமாக மாறிவருகின்றது எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய தூதுவர் அவர்கள் சவுதி அரேபியாவானது இராச்சியத்தில் கிரிக்கெட் விளையாட்டை மேம்படுத்துவதற்காக 'சவுதி கிரிக்கெட் சம்மேளனம்' என்ற தாபனத்தை உருவாக்கி இருப்பதாகவும் இதன் மூலம் இலங்கையும் சவுதி அரேபியாவும் கிரிக்கெட் விளையாட்டு தொடர்பில் இரு தரப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் ஆராய முடியும் எனவும் குறிப்பிட்டார்.

நிகழ்வின் இறுதியில் தூதுவர் அமீர் அஜ்வத் அவர்கள் "இலங்கைத் தூதுவர் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி"யின் முதலாவது வெற்றிக்கிண்ணத்தை இந்தச் சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய 'ரியாத் ஸ்ரீலங்கன்' அணியின் தலைவருக்கு வழங்கி வைத்தார்.

நடந்து முடிந்த "இலங்கைத் தூதுவர் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி – 2024" முதற் போட்டித் தொடரை ரியாதிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்தின் முதலாம் செயலாளர் திரு. விந்தன முனசிங்க, கன்சியுலர் பிரிவின் தூதரக இணைப்பதிகாரி திரு. சாமர பெரேரா, இலங்கைக் கலாசார மன்ற ஏற்பாட்டாளர் திரு. நிஹால் கமகே மற்றும் கலாசார மன்றத்தின் விளையாட்டுத் துறை ஒருங்கிணைப்பாளர் திரு. மைக்கல் நிக்ஸன் ஆகியோர் ஏற்பாடு செய்து ஒழுங்கமைத்தனர்.

அதேவேளை ரியாதிலுள்ள "இலங்கைத் தூதுவர் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி – 2024" போட்டித்தொடருடன் இணைந்ததாக, இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜித்தாவில் உள்ள இலங்கை கொன்சல் ஜெனரல் அலுவலகமும் இடம்பெயர்ந்து வாழும் இலங்கைச் சமூகத்தினருடன் இணைந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அப்போட்டித் தொடரில் கலந்து கொண்ட 8 அணிகளில் 'ஸ்ரீ லங்கா டைட்டன்ஸ்' அணி சம்பியன் கிண்ணத்தையும் 'லங்கன் லயன்ஸ்' அணி ரனர்ஸ் அப் கிண்ணத்தையும் தமதாக்கிக் கொண்டன.

# பிரிஸ்பேன் டென்னிஸ் தொடர் சம்பியனானார் ஜிரி லஹெக்கா



அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் தொடரில் ஆடவர் பிரிவின் இறுதிப் போட்டியில் அமெரிக்க வீரர் ரைய்லி ஒபெல்காவை வீழ்த்திய செக்குடியரசு வீரர் ஜிரி லெஹெக்கா சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

புகழ்பெற்ற பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் செக்குடியரசு வீரர் ஜிரி லெஹெக்கா, உலக தரவரிசையில் 293ஆவது இடத்தில் இருக்கும் அமெரிக்க வீரர் ரைய்லி ஒபெல்காவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக ஆரம்பித்த இந்தப் போட்டியில் லெஹாக்கா 4:1 என்ற கணக்கில் முதல் செட்டில் முன்னிலையில் இருந்தபோது, ரைய்லி ஒபெல்கா காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகினார். இதையடுத்து ஜிரி லெஹெக்கா சம்பியன் பட்டம் வென்றார்.

# சகலதுறையில் பிரகாசித்த தென்னாபிரிக்கா தொடரைக் கோட்டை விட்டது பாகிஸ்தான்



சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2ஆவதும் இறுதியுமான போட்டியில் 10 விக்கெட்டுக்களால் மிக இலகு வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி தொடரை 2:0 என கைப்பற்றியதுடன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலை பெற்றிருக்க 2ஆவதும் இறுதியுமான போட்டி கடந்த 3ஆம் திகதி கேப்டவுனில் ஆரம்பித்திருந்தது. போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதற்கேற்ப முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 615 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் ரயான் ரிகில்டொன் 259 ஓட்டங்களையும், பவுமா 109 ஓட்டங்களையும், வெரய்னே 100 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் அப்பாஸ் மற்றும் சல்மான் அலி அஹா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி வெறும் 194 ஓட்டங்களுக்குள் சுருண்டு போனது. துடுப்பாட்டத்தில் பாபர் அஸாம் மாத்திரம் 58 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் ரபாடா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். இதனால் முதல் இன்னிங்ஸில் 421 ஓட்டங்கள் பின்னிலை பெற்றமையால் அதே நாளில் பாகிஸ்தான் அணியை பளோஓன் முறையில் துடுப்பெடுத்தாட தென்னாபிரிக்க அணி பணித்தது.

இதற்கேற்ப தமது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களான ஷான் மசூத் மற்றும் பாபர் அஸாம் ஜோடி 205 ஓட்டங்களைப் பகிர்ந்தது. இதில் பாபர் அஸாம் 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களத்திலிருந்த ஷான் மசூத் சதம் கடந்து 145ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் வந்த வீரர்களில் எவரும் அரைச்சதம் கூட அடிக்காமல் போக பாகிஸ்தான் அணி 478 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. பந்துவீச்சில் ரபாடா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

பின்னர் பாகிஸ்தான் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 58 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை வெறும் 7.1 ஓவர்களில் கடந்த தென்னாபிரிக்க அணி 10 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்றதுடன் தொடரை 2:0 என கைப்பற்றி அசத்தியது. போட்டியின் நாயகனாக இரட்டை சதம் கடந்த ரயான் ரிகில்டொனும், தொடரின் நாயகனான ஜெமிஸனும் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.